Registered as a news paper.

இலவசப் பிரதி

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 16 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்ஹிஜ்ஜா 25 (28.02.2003) வெள்ளிக்கிழமை இதழ் :149

**English Academy**

Email: thangan 672002 @ yahoo.com

T.P. - 021-2222588

210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



பிரதான வீதி, சித்தன்கேணி.

உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த இடம்

Better Place For Your Children

(சி-569)

## வடக்கில் இயல்புநிலையை தோற்றுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி பிரதமர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் முழுமையான இயல்புநிலையை ஏற்படுத்துவற்கான துரித நடவடிக்கையை மேற்கொள்ளும்படி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு ஒரு வருடகாலம் கடந்த நிலையிலும், வடபகுதி மக்கள் இன்னமும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பவில்லை. பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாடுகளும், பாதுகாப்பு நடைமுறைகளும் இயல்புநிலை தோன்றுவதற்கு இன்னமும் தடையாகவிருந்துவருகின்றது.

இவ்வாறான விடயங்கள் தொடர்பாக, யாழ்.மனிதநேய அமைப்புக்கள் நோர்வே அரசாங்கத்திற்கு மனுவொன்றைச் சமர்ப்பித்திருந்தன.

இதனைத் தொடர்ந்து, நோர்வே அரசு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கு இவ்விடயத்தினைக் கொண்டுவந்தது.

இதையடுத்து- கடந்த ஞாயிற்றுக்கிழமை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, அமைச்சர் மிலிந்த மொறகொட, கடற்படைத் தளபதி தயா சந்தகிரி, ஆகியோரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திடீரென அழைத்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் 88 காவலரண்கள் அகற்ற படைத்தரப்பு இணக்கம்

(யாழ்ப்பாணம்)


யாழ்.குடாநாட்டில் இயல்புநிலையைத் தோற்றுவிப்பதற்காக படையினரின் சுமார் 88 காவலரண்களை உடனடியாக அகற்றுவதற்கு படைத்தரப்பு இணக்கம் தெரிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பலாலிப் படைத்தளத்தில் நடைபெற்ற மனிதநேய அமைப்புக்களுடனான சந்திப்பின்போது பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்ணான்டோ மேற்படி விடயம் தொடர்பாக உறுதியளித்தார்.

யாழ்.குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே சுமார் 152 காவலரண்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும், இவற்றில் 88 காவல் அரண்களை அகற்றுவதற்குத் தாம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் உறுதியளித்தார். அதேவேளை - ஏ-9 வீதியை வாரத்தில் ஏழு நாட்களும் திறந்து வைப்பதற்கு தாம் நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க)

# சமாதான முயற்சியை மிக ஆர்வத்துடன் அமெரிக்கா அவதானித்து வருகின்றது!



அமெரிக்க ஜனாதிபதியுடன் புதிய தூதுவர் தேவிந்த சுபசிங்க.

## அந்நாட்டு ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அறிவிப்பு

(வொஷிங்ரன்)

**இலங்கையில் - தற்போது நடைபெற்றுவரும் அமைதி முயற்சிகளை அமெரிக்கா மிகுந்த ஆர்வத்துடன் அவதானித்து வருவதாக, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தெரிவித்துள்ளார்.**

**அமெரிக்காவுக்கான புதிய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள தேவிந்த ஆர். சுபசிங்க, தனது பதவியேற்புக் கடிதத்தை சம்பிரதாயபூர்வமாக - அமெரிக்க ஜனாதிபதியிடம் கையளித்த வைபவத்திலேயே ஜோர்ஜ் புஷ் இக்கருத்தை வெளியிட்டார்.**

அமெரிக்க ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான வெள்ளை மாளிகையில் 'ஓவல் ஹவுஸ்' இல் - நேற்றுமுன்தினம் மாலை இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் - இலங்கையில் நடைபெறும் அமைதி முயற்சிகளுக்கு அமெரிக்கா அளித்துவரும் ஆதரவுக்கு - புதிய தூதுவர் நன்றி தெரிவித்தார்.

இதன்போது பதிலளித்த ஜோர்ஜ் புஷ் - இலங்கையின் நண்பனாக அமெரிக்கா தொடர்ந்து உதவி செய்யும் எனத் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி சிறான் கூட்டம் 4 அமர்வுகளாக நடைபெற்றது

(கிளிநொச்சி)

வடக்கு - கிழக்கிற்கான உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு தேவைகளுக்கான உபகுழுவின் கூட்டம் நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

நேற்றுக்காலை 9 மணியளவில் இக்கூட்டத்திற்காக நோர்வே நாட்டுப் பிரதிநிதிகளும், ஜப்பானியப் பிரதிநிதிகளும், அரசதரப்புப் பிரதிநிதிகளும் இரண்டு உலங்கு வானூர்திகளில் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தை வந்தடைந்தனர்.

இவர்களை, அரசியல்துறையைச் சேர்ந்த தங்கன், தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகச் செயலாளர் புலித்தேவன் ஆகியோர் கைலாகு கொடுத்து வரவேற்று, கிளிநொச்சி சிறான் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றனர். (10 ஆம் பக்கம் பார்க்க)



பாலகுமார், தமிழ்ச்செல்வன், ஜோய் மகேஸ்வரன்.



வெஸ்பேர்க் தலைமையில் நோர்வேத் தரப்பு.



ஜப்பான் தரப்புக் குழுவினர்.



அரசாங்கத் தரப்புக் குழுவினர்.

## கொமன்வெல்த் ஒன்றியம் அமைதி முயற்சிக்கு ஆதரவு

இலங்கையில் நடைபெறும் சமாதான முயற்சிகளுக்கு தேவைப்படுமிடத்து, பொதுநலவாய நாடுகளின் ஒன்றியம் உதவி வழங்கத் தயாராக உள்ளது எனப் பொதுநலவாய நாடுகளின் ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் டொன்சி மக்கினன் தெரிவித்தார்.

பொதுநலவாய நாடுகளின் ஒன்றிய பிரதிநிதிகளில் நால்வர் கொண்ட குழு யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை நேற்று மேற்கொண்டது. இவர்கள், நேற்று மதியம் 12 மணிக்கு யாழ். செயலகத்தில் அரச அதிபருடன் கலந்துரையாடல் ஒன்றை நடாத்தினர்.

இக்கலந்துரையாடலில், செய

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



ஒரு வருசத்துக்குப் பிறகு இயல்பு நிலை பற்றி இப்பவாச்சுது கவனம் வருதே!

## நோர்வே அமைச்சர் அடுத்தவாரம் இலங்கைக்கு!

(கொழும்பு)

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீட்டர்சன், பிரதி அமைச்சர் விதார் ஹெல்கிசன் ஆகியோர் அடுத்தவார இறுதியில் இலங்கை வருகின்றனர்.

கொழும்புக்கும், கிளிநொச்சிக்கும் விஜயம் மேற்கொள்ள இருக்கும் இவர்கள்- அடுத்த சுற்றுப் பேச்சு வார்த்தைகளில் முக்கிய இடம் வகிக்கப்போகும் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்துவார்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE

யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.

(சி-518)

01-505632

## மர்மப்பொருள் வெடித்துக் காயம்

(யாழ்ப்பாணம்)

வீட்டு வளவினுள்ளிருந்த மர்ம வெடிபொருள் வெடித்ததில், இளைஞன் ஒருவர் காயமடைந்தநிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 6 மணியளவில் பளை வேம்பொடுகேணியில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில், இதே இடத்தைச் சேர்ந்த ஜெயராசா சிவநேசன் (வயது 18) என்பவரே காயமடைந்தவராவார்.

வீட்டு வளவினுள் காணப்பட்ட மர்ம வெடிபொருள் ஒன்றை எடுத்துப் பரீட்சித்துப் பார்த்தவேளை, அது திடீரென வெடித்ததில் இளைஞனின் கையில் பலத்த காயம் ஏற்பட்டதுடன், இவரின் நான்கு விரல்களும் துண்டிக்கப்பட்டன. (ச)

# யாழ். பல்கலை கலைப்பீடத்துக்கு 215 மாணவருக்கு விசேட அனுமதி!

யாழ்.பல்கலைக்கழக கலைப்பிரிவில் 215 மாணவர்கள் விசேட அனுமதியின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நேற்று வெளியிட்டது.

மேற்படி அனுமதி பெற்றவர்கள், எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பல்கலைக்கழக பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் பதிவுகளை மேற்கொண்டு விரிவுரைகளுக்குச் செல்லலாமெனப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

கலைப்பீட விரிவுரைகள் கடந்த மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தெரிவு செய்யப்பட்ட 215 பேரினது விபரங்கள் மாவட்டரீதியாகக் கீழே தரப்பட்டுள்ளது.

**யாழ்ப்பாணம்**

என்.நவரத்தினம், பி.கார்னிகா, கே.மஞ்சுளா, எஸ்.சுதர்ஸன், கே.கவிதா, எஸ்.ஈ.காங்கேஸ்வரன், கே.கலைவாணி, எஸ்.கலைவாணி, எஸ்.சுபேசன், ரி.சுபாஜினி, எஸ்.அகல்யா, எஸ்.சுதன், ஆர்.யசோதரன், எஸ்.சத்யா, பி.எஸ்.செல்வராசா, எஸ்.சிவலிங்கம், கே.தங்கவேல், வி.மோகனதாஸ், பி.பிரபா, எஸ்.கந்தையா, எஸ்.சுகந்தி, என்.சயன்தன், ஏ.சொக்கலிங்கம், ரி.பிரசன்னா, ஆர்.சுதாகரன், வி.கலைச்செல்வி, எ.எமிலினி சாந்தினி, வி.ருக்மணி, எம்.மதுரா, எஸ்.நாதிபரன், கே.மதுமதி, எஸ்.மாலதி, ரி.எம்.லெற்றிசியா, வி.விஜயரூபன், ஏ.ஜெபநேசன், என்.ரதி, என்.சஞ்ஜீவன், வி.ஜெகதீஸ், எம்.சயந்தமதி, பி.நித்தியா, சி.என்.கே.துர்க்கா, எஸ்.சதிசுகன்யா, ரி.தர்மலிங்கம், வை.உமாறஜனி, பி.நிர்மலாசந்திராணி, பி.பாலகிருஷ்ணன், கே.பவானந்தி, எஸ்.தேவமுகுந்தன், வி.சுஜீதா, ஜே.சி.சர்மினி, என்.ஹர்சினி, ஜே.ஜே.சாந்தி, வை.ராமநாதன், எஸ்.லோகதர்ஷினி, பி.உதயகுமார், யு.ஸ்ரீகணேசலிங்கம், எம்.அன்றோனிற்றா, வை.சகாயடோனேஸ், ரி.திவ்யங்கரி, எஸ்.கேதீஸ்வரன், ரி. கேதீஸ்வரி, எஸ்.ஸ்ரீகௌதமி, எஸ்.உதயசீலன், ரி.தாரணி, ஆர்.புஸ்பராஜ், ரி.கார்த்திகேயன், எஸ்.அமு[illegible]னி, பி.மயூரன், ரி.ஜெயபிரதீப், என்.நவநீதன், எஸ்.சசிமாலா, பி.ஜெனின், கே.சங்கீதா, கே.சுதாகர், ரி.அருள்குமாரன், வை.பிரகலாதன், சி.மனோரஞ்சன், ஜே.பி.ஜே.லகுசா, வி.நயனா, கே.மோகனப்பிரியா, ஆர்.சுதர்சினி, எஸ்.பிரதீபன், எ.யேசுதாசன், வை.யோகஞ்சனா, எஸ்.திருச்செந்தூரன், கே.சுகந்தினி, ஆர்.அனிதா, கே.சக்திதாசன், வி.ரவிசங்கர், எஸ்.துர்க்காம்பிகை, ரி.சக்திவேல், எஸ்.ருசாந்தி, எஸ்.தேவநிதி, கே.சர்மிளா, எஸ்.குகதாசன், என்.சீதாஜினி, ரி.தமிழினி, ரி.உசாந்தியா, எஸ்.சிவபாதரத்னம், என்.புனிதகுமார், ஆர்.மேகலா, ஈ.லெட்சுமி, ஆர்.குணசிங்கம், என்.சோபனா, எஸ்.கலைச்செல்வி, பி.எஸ்.அகிலா, எம்.தயாளினி, எவ்.ஜே.டிலெய்லா, எஸ்.சோபனா, என்.முருகையா, கே.யாழினி, எம்.யசோதா, எஸ்.சிவசக்தி, எஸ்.எஸ்.யோகேஸ்குமாரி, ஏ.காயத்திரி.

**கிளிநொச்சி**

எல்.அமிதாஞ்சன், என்.விஷ்ணுவர்தினி, பி.ரஞ்சினிதேவி, கே.பஜனி, வி.இராமசாமி, எ.கொலஸ்ரிகா, பி.ஜெயநேசா, வி.சந்திரமோகன், யு.லூரிஸ்மேரி, வி.வைகுந்தன், வி.எஸ்.பானுமதி.

**மன்னார்**

என்.சி.பி.குறூஸ், எம்.பவீந்திரன், ஏ.வி.சூசை, ஜே.எம்.ஆர்.பெர்ணான்டோ, எம்.எம்.அமலி, ரி.ஜெயந்தாசீலன், வை.கோகிலவாணி, ஆர்.ரேணுகாதேவி.

**முல்லைத்தீவு**

ரி.செவ்வந்தி, என்.ரஜீதா, கே.காண்டீபன், எஸ்.ஜெயகாந்தி, எஸ்.சுபாஸ், எக்ஸ்.எஸ்.சஜிரகா, ஜே.விஜயதர்சினி, ஐ.ஜெயசித்ரா, எம்.நிஷாலருந்தினி, எஸ்.ராசரத்தினம், ரி.என்.கலெஸ்ரா, பி.நடராசா, எஸ்.அகிலா, எஸ்.கஜேந்திரன், ரி.விஜிதா, வை.கீதா, ஆர்.பூங்கோதை, யு.கந்தையா, ஜே.திருநாவுக்கரசு, பி.சுபத்ரா, எஸ்.சைலசா, என்.தாமோதரம்பிள்ளை, எஸ்.பார்த்தீபன்.

**திருகோணமலை**

எஸ்.சுகன்யா.

**வவுனியா**

ரி.ஜெ.வைலட், கே.நவரத்தினராசா, எஸ்.சுஜிஸ்தா, எஸ்.விஜயமலர், ரி.உமாமகேஸ்வரி, கே.விஜயந்தி, வி.நளினி, ஆர்.நாகராசா, ஜி.சந்திரகலா.

**மட்டக்களப்பு**

கே.ஜெயரூபி, ஆர்.சுபேந்தினி, எஸ்.தயானந்தினி, ஏ.கிருஷாந்தலிங்கம், ஜி.வினோஜினி, ஏ.பிரேமகரன், ரி.கிரிசா, பி.துஷ்யந்தன், எம்.அன்னலட்சுமி, ஜி.பிரியதர்சினி, எம்.பி.ஜகனியா, வி.ரி.பஸ்மியா, எஸ்.பேமநந்தி, எஸ்.தர்மினி.

எவ்.மகேந்திரன், ஈ.ஜெயந்திரன், ஏ.கருணாகரன், எஸ்.தில்லைநடேசன், ரி.கிருஷ்ணி, கே.மதனப்பிரியா, கே.சத்யா, ரி.லதாராணி, கே.சஜிகுமார், எஸ்.விஸ்வராசா, பி.பரசஞ்சினி, ரி.வனஜா, கே.ரதீஸ்வரி, எஸ்.சுதாஜினி, எஸ்.குகதீபன், ஐ.வீரசிங்கம், கே.புவனா, கே.சுஜிதா.

**கொழும்பு**

எஸ்.சிந்துஜா, எஸ்.கோகுலன்.

**புத்தளம்**

கே.ராதிகா.

**மாத்தளை**

மேரிசின்னிப்பிரிதா, ஜே.எவ்.ரிங்ஹாம், கே.யமுனசிங்கம்.

**அம்பாறை**

எஸ்.சதீபவனி, கே.மோகனதாஸ், கே.ரஞ்சிதகுமார்.

**கேகாலை**

எம்.ஜே.எம்.இன்சாப்.

**கண்டி**

எஸ்.ராதிகா, ஜே.பி.எம்.ஜமீலி.

# அதிர்ஷ்ட வாரம் 28.02.2003 ~ 06.03.2003

## மேடம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

தொழில் ஸ்தானத்தில் ஸ்திரத்தன்மையும் நல்ல முன்னேற்றத்தையும் கொடுக்கும். கலைத்துறையில் ஈடுபட்டுள்ளோர் அதிக நன்மையடைவர். குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கு இடமுண்டு. எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும். வியாபாரிகள் முதலீடு செய்யலாம். நல்ல லாபம் கிடைக்கும். பெண்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சியும், கணவரின் ஆதரவும் உண்டு. மாணவர்கள் கல்வியில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

## இடபம்

கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம், 1, 2ஆம் பாதம்

குடும்பத்தில் இடையிடையே சிறு பிரச்சினைகளைக் கொடுத்தாலும் சமாளித்துக் கொள்வீர்கள். தொழிலிலும் அதிக கவனம் செலுத்த முடியாதிருக்கும். உற்சாகமில்லாத தன்மையைக் கொடுக்கும். பணப்புழக்கம் நன்றாக இருக்கும். புதிய பொருட்கள் கொள்வனவு செய்வீர்கள். வியாபாரிகளுக்கு போட்டி அதிகமிருக்கும். ஏமாற்றப்படலாம். அவதானம் தேவை. பெண்களுக்கு மன வேதனையையும் வயிறு, நெஞ்சில் வலியையும் கொடுக்கும். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றமுண்டு.

## மிதுனம்

மிருகசீரிடம், 2, 3ஆம் பாதம் திருவாதிரை, புனர்பூசம், 1, 2, 3 ஆம் பாதங்கள்

வாகனம், பூமியால் லாபமுண்டு. பிரயாணத்திற்கு இடமுண்டு. நன்மையைக் கொடுக்கும். புதிய அந்தஸ்தும், பேரும் புகழும் கிடைக்கும். விவாகாதி சுபகாரியங்களில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வியாபாரிகளுக்கு அமோகமான லாபம் கிடைக்கும். யோசிக்காமல் முதலீடு செய்யலாம். பெண்களுக்கு குடும்ப சுகம் சந்தோ'ம் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றமுண்டு.

## கர்க்கடகம்

புனர்பூசம், 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

உடல்நிலை அடிக்கடி பாதிக்கப்படும். மனதில் அமைதி இராது. தொழிலில் பிரச்சினைகளையும் சக தொழிலாளரின் ஒத்துழைப்பு இன்மையையும் கொடுக்கும். வீண்பழி கேட்கவும் பலனுண்டு. அவதானமாக இருந்தால் தவிர்க்கலாம். வியாபாரிகளுக்கு அதிகம் நன்மை கிடையாது. பொறாமை, ஏமாற்றப்படுதல் போன்றவற்றால் தொழில் பாதிக்கப்படும். பெண்களுக்கு குடும்பத்தில் பிரச்சினைகளைக் கொடுக்கும். மாணவர்கள் கல்வியில் பின்னடைவு காணப்படும்.

## சிங்கம்

மகம், பூசம், உத்தரம், 1ஆம் பாதம்

பொருளாதாரக் கஷ்டத்தைக் கொடுக்கும். கையில் பணம் இராது. தொழிற்துறையில் நல்ல முன்னேற்றமிருக்கும். பிரயாணக் கஷ்டமுண்டு. வாகன யோகமுண்டு. உறவினர் நண்பர்களின் உதவி கிடைக்கும். வியாபாரிகள் அதிக முதலீட்டை தவிர்ப்பது நல்லது. பெரியளவில் லாபத்தை எதிர்பார்க்க முடியாது. பெண்களுக்கு குடும்ப சுகமுண்டு. கணவர், பிள்ளைகளின் ஆதரவு உண்டு. மாணவர்கள் கல்வியில் அதிக முன்னேற்றத்தைக் கொடுக்கும்.

## கன்னி

உத்தரம், 2, 3, 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை, 1, 2ஆம் பாதம்

தொழில் முன்னேற்றமுண்டு. நினைத்த காரியத்தை செய்து முடிப்பீர்கள். வெளியூர் பிரயாணம் கைகூடும். விவாகப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்படும். இடையிடையே தேகசுகம் பாதிக்கப்படும். வியாபாரிகள் அதிகம் லாபமடைவர். அதிக முதலீடு செய்யலாம். பெண்களுக்கு குடும்ப சந்தோஷம், ஆபரண சேர்க்கைக்கு இடமுண்டு. மாணவர்கள் கல்வியில் அதிக கவனம் செலுத்தமுடியாதிருக்கும்.

## துலாம்

சித்திரை 3, 4ஆம் பாதம், சுவாதி, விசாகம், 1, 2, 3ஆம் பாதம்

தொழில் செய்யுமிடத்தில் பிரச்சினைகளைக் கொடுக்கும் மனதில் நிம்மதி இராது. வீண்பழி, ஏமாற்றம், அவமானம் போன்றவற்றைக் கொடுக்கும். அவதானமாக இருந்தால் ஓரளவு தவிர்த்துக் கொள்ளலாம். வியாபாரத்தில் நம்பிக்கைத் துரோகத்தைச் சந்திப்பீர்கள் அதனால் பாதிப்புக்களை எதிர்நோக்க வேண்டிவரும். பெண்களுக்குத் தேகசுகம் பாதிக்கப்படும். குடும்பத்தில் அமைதி இராது. மாணவர்கள் ஞாபக மறதியால், கல்வியில் பின்னடைவைக் கொடுக்கும்.

## விருச்சிகம்

விசாகம், 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

வெளியூரிலிருந்து உதவிகள் கிடைக்கும். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். மனம் சந்தோசமாக இருக்கும். குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும். தொழிலில் சமநிலை காணப்படும். எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். தேக ஆரோக்கியம் நல்லநிலையில் இருக்கும். வியாபாரிகளுக்கு நல்ல இலாபம் கிடைக்கும். பெண்களுக்குப் பொருள் வந்து சேரும். குடும்ப சந்தோஷம் காணப்படும். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் காணப்படும்.

## தனு

மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்

தேகசுகம் பாதிக்கப்படும். எடுத்த காரியம் தாமதமாகும். பிரயாணக் கஷ்டம் உண்டு. பொருட்செலவைக் கொடுக்கும். மனதில் பதற்றம் காணப்படும். அடிக்கடி கோபப்படுவீர்கள். உறவினருடன் மனக்கசப்பைக் கொடுக்கும். வாகனம் தொல்லை கொடுக்கும். வியாபாரிகள் அதிக இலாபத்தை எதிர்பார்க்க முடியாது. போட்டி அதிகம் இருக்கும். பெண்கள் குடும்பத்தில் பிரச்சினைகளை எதிர்நோக்குவார்கள். உடற்சோர்வு காணப்படும். மாணவர்களுக்கு உற்சாகமில்லாத நிலை இருக்கும்.

## மகரம்

உத்தராடம், 2, 3, 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதம்

உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி காணப்படும். எதிர்பார்த்த பொருள் கைக்கு வந்து சேரும். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். சுபகாரியம் நிகழும். தொழிற்துறையில் நல்ல முன்னேற்றம் இருக்கும். வியாபாரிகள் அதிக இலாபத்தை எதிர்பார்க்கலாம். அதிக முதலீடு செய்யலாம். நன்மையுண்டு. பெண்களுக்கு களஸ்திர சுகம் உண்டு. குடும்ப சந்தோஷமும் நினைத்த காரிய சித்தியும் உண்டு. மாணவர்கள் கல்வியில் அதிக முன்னேற்றம் இராது.

## கும்பம்

அவிட்டம், 3, 4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி, 1, 2, 3ஆம் பாதம்

பகைவர் தொல்லை அதிகமிருக்கும். தொழில் ஸ்தானத்தில் போட்டி அதிகம் காணப்படும் இருப்பினும் நல்ல முன்னேற்றம் உண்டு. உதவி செய்யப்போய் வீண்வம்பில் மாட்டிக்கொள்வீர்கள். அவதானமாக இருக்கவும். எந்தவிடயத்திலும் ஒரு தடவைக்குப் பல தடவை சிந்தித்துச் செயற்படவும். வியாபாரிகளுக்குச் சமபலன் உண்டு. முதலீட்டிற்கேற்ற இலாபம் கிடைக்கும். பெண்களுக்கு சிறு சுகயீனங்கள் கொடுக்கும். மாணவர்களுக்குக் கல்வி முன்னேற்றம் உண்டு.

## மீனம்

பூரட்டாதி, 4ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி

நீண்டகாலமாக எதிர்பார்த்த பொருள் கிடைக்கும். தொழிற்துறையில் நல்ல முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம். பெரியோர் ஆதரவும் உதவியும் கிடைக்கும். அயலவரால் நன்மை உண்டு. பிரயாணத்தால் நன்மை உண்டு. வியாபாரிகள் அதிக முதலீடு செய்யலாம். நல்ல இலாபத்தை எதிர்பார்க்க முடியும். பெண்களுக்கு குடும்ப சந்தோஷமும் உறவினர் வருகையால் கலகலப்பாகவும் இருக்கும். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் காணப்படும்.

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

## கலாசாலையில் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞான வட்டம்- உலகமயமாதலும் விடுதலைச் சூழலியமும் என்ற தலைப்பிலான கருத்துரையையும், கலந்துரையாடலையும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடாத்தவுள்ளது.

கவிஞர் இ.முருகையன் தலைமையில் நடைபெறும் இக்கருத்துரையில் 'தமிழ்நாடு பூவுலக நண்பர்கள்' ஸ்தாபகர் செ.நெடுஞ்செழியன் கருத்துரை வழங்கவுள்ளார். (ச)


## சிறு விளம்பரம்

### பல் கட்டுதல்

பல் கட்டுதல், பல் கிளிப் போடுதல் நல்ல முறையில் நியாய விலையில் மேற்கொள்ளலாம். கண் பரிசோதிக்கப்பட்டு நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறலாம். (மொறாயஸ்) ஒளிச்சுடர், பல் மூக்குக் கண்ணாடி அகம், இல. 05, பலாலி வீதி, அப்பலோ கிளினிக் முன், யாழ்ப்பாணம். (சி-585)

### தவறிவிட்டது

குணரத்தினம் திருக்குமரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல.703472028 V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைத்துதவவும். (263)

நிறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
பிரியமானவளே
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 காட்சி
M.I. 2

ராஜா யாழ்ப்பாணம்.
7 ஆவது வாரமாக
விஜய், ஸ்நேகா, மணிவண்ணன், வடிவேல் நடித்த
வசீகரா

2.30, 6.30 மட்டும்
THE MUMMY RETURNS
இன்று மட்டும்
அவள் வருவாளா

## அறிவித்தல்

### வடமராட்சி கிழக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்கம்

மறு அறிவித்தல்வரை மண் விநியோகம் நடைபெறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எம்.அழகராசா (தலைவர்),
வடமராட்சி கிழக்கு
சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்கம்.
குடத்தனை.
(262)

# வட - கிழக்கில் 42 பாடசாலைகளுக்கு மிகவிரைவில் இன்ரநெற் வசதிகள்!

## மாகாணக் கல்வி அமைச்சு அதிகாரி தெரிவிப்பு

(திருகோணமலை)

வட-கிழக்கு மாகாணத்திலுள்ள 42 பாடசாலை நூலகங்களுக்கு இன்ரநெற் வசதிகள் செய்து கொடுக்கப்படவிருப்பதாக வட-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்கள உதவிக்கல்விப் பணிப்பாளரும், நூலக இணைப்பாளருமான ந.அனந்தராஜ் தெரிவித்தார்.

இன்னும் சில நாட்களில் 42 தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கான இன்ரநெற் வசதிகள், அதற்குத் தேவையான கணினி மற்றும் கருவிகள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் சிலவற்றில் தொலைபேசி வசதிகள் இல்லாமையால் - இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் சில சிக்கல்கள் ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இன்ரநெற் வசதிகளுக்காகத் தெரிவு செய்யப்பட்ட 42 பாடசாலைகளில் 40 பாடசாலைகளின் விபரங்கள் வெளியாகியுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் - வேம்படி மகளிர் கல்லூரி, பெரியபுலம் மகாவித்தியாலயம், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, நயினாதீவு மகாவித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், மானிப்பாய் இந்துக் கல்லூரி,

கிளிநொச்சி மாவட்டத்தில் - அக்கராயன் மகா வித்தியாலயம்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் - முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி, மல்லாவி மகா வித்தியாலயம், உடையார்கட்டு மகா வித்தியாலயம்

வவுனியா மாவட்டத்தில் - செட்டிகுளம் மகா வித்தியாலயம், சைவப் பிரகாச பெண்கள் மகா வித்தியாலயம், புதுக்குளம் மகா வித்தியாலயம், பூந்தோட்டம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

மன்னார் மாவட்டத்தில் - சென் சேவியர் பெண்கள் கல்லூரி, பாத்திமா மத்திய மகா வித்தியாலயம், அடம்பன் மகா வித்தியாலயம்.

திருமலை மாவட்டத்தில் - கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, விவேகானந்தாக் கல்லூரி, சென்.மேரிஸ் கல்லூரி, கிண்ணியா மத்திய கல்லூரி, சேனையூர் மத்திய மகா வித்தியாலயம், அக்ரபோதி மகா வித்தியாலயம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் - கல்லடி விபுலானந்தா கல்லூரி, காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயம், சிவானந்தா கல்லூரி, வாழைச்சேனை இந்துக் கல்லூரி, பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்.

அம்பாறை மாவட்டத்தில் - டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரி, கல்முனை சாஹிராக் கல்லூரி, கார்மெல் பாத்திமா கல்லூரி, சம்மாந்துறை முஸ்லிம் பெண்கள் பாடசாலை, அக்கரைப்பற்று முஸ்லிம் பெண்கள் மகா வித்தியாலயம், ஆர்.கே.எம்.மகா வித்தியாலயம், தெகியத்த கண்டிய மகா வித்தியாலயம், பதியத்தலாவ மத்திய மகா வித்தியாலயம், இயலவத்த மகா வித்தியாலயம், ராஜகதன வித்தியாலயம், பெரிகுணான மத்திய மகா வித்தியாலயம்,

ஆகிய பாடசாலைகளுக்கே இன்ரநெற் வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

(க)

### நெடுந்தீவில் வேலையற்றோரை பதிய ஏற்பாடு

தொழிற்திணைக்கள அதிகாரிகள் நெடுந்தீவில் உள்ள வேலையற்றோர் பற்றிய பதிவுகளை மேற்கொள்ளவென எதிர்வரும் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு வருகைதரவுள்ளனர்.

இதற்கான பதிவுகள் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளதாகவும், வேலையற்றிருக்கும் அனைவரும் பதிவுசெய்து கொள்ளுமாறும் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார்.


(113)

### மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண் காயம்

(நவிண்டில்)

மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்திலிருந்து பிரயாணம் செய்த பெண்மணி தவறிவிழுந்து வலதுகை முறிந்த நிலையில் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். புதன்கிழமை பொலிகண்டியில் நடந்த இவ்விபத்தில் அல்வாயைச் சேர்ந்த வசந்தன் சிவஞானம்மா (45) என்பவரே காயமுற்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டார்.

(116)



யாழ். உதைபந்தாட்ட லீக்கின் விருதுவழங்கும் விழா அண்மையில் நடைபெற்றபோது, விருதுபெற்ற லீக் தலைவர் கிளீபேட் அன்ரனிப்பிள்ளை, அமரர் ஏ.ஜோன்மாஸ்ரரின் சார்பில் விருதைப் பெற்ற அவரது பாரியார், லீக்கின் செயலாளர் எம்.பிரான்ஸிஸ், லீக்கின் உபதலைவர் ஜேக்கப், அமரர் பி.ஆர்.தம்பிநாயகத்தின் சார்பில் விருதைப் பெற்ற அவரர் பாரியார் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், லீக்கின் முன்னாள் தலைவர் எஸ்.ரி.கணநாதன் உரையாற்றுவதையும் படத்தில் காணலாம்.

# பட்டதாரிகளுக்கு முப்படைகளிலும் வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம்!

## அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

வேலையற்ற பட்டதாரிகளுக்கான பயிற்சித் திட்டத்தின் கீழ் முப்படைகளிலும் பயிற்சிகள் வழங்கப்படும் என்று தொழிற்பயிற்சி அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

வேலையற்ற இருபதாயிரம் பட்டதாரிகளுக்கு அரசாங்கம் பல்வேறு அரசதுறைகளில் பயிற்சிகளை வழங்கவுள்ளது. இவற்றுள் இராணுவம், கடற்படை, விமானப்படைப் பொலிஸ், வங்கித்துறை, ஏற்றுமதி அபிவிருத்திச்சபை மற்றும் அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களில் பயிற்சிகள் வழங்கப்படவிருக்கின்றன.

இது தொடர்பான பொருத்தமான திட்டங்களை வகுக்க 29 பேர் கொண்ட செயலணி அமைக்கப்படும் எனவும் தெரிவித்த அமைச்சர் மகிந்த சமரசிங்க, தனியார் துறையுடன் தொடர்புபட்ட பணிகளில் பயிற்சிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

காப்புறுதி, வங்கித்துறைகள், ஆபரணக் கைத்தொழில், பல்தேசிய நிறுவனங்கள், ஹோட்டல், உல்லாசப் பயணத்துறை, சந்தைப்படுத்தல், அச்சகத் தொழில், இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் தொழிற்றுறைகளில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பான பூரணமான அறிக்கையொன்று தயாரிக்கப்படவுள்ளது. இதில் பட்டதாரிகள் வேலையின்றி இருப்பது பற்றிய விபரங்கள், இதற்கான காரணங்கள், தீர்வுகள் மற்றும் அதற்கான வழிமுறைகள்-

தனியார் துறைகளில் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குதல், குறுகியகாலத்தில் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான குறுகியகால, நீண்டகால வழிமுறைகள், யோசனைகளை உள்ளடக்கியதாக இவ்வறிக்கை தயாரிக்கப்படவுள்ளது.

### ஆய்வுப் பரீட்சை

(நவிண்டில்)

சென்றவருடம் தரம் 4 இல் கல்விகற்ற மாணவர்களுக்கான ஆய்வுப் பரீட்சை எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை நடாத்தப்படவுள்ளது. கொழும்புப் பல்கலைக் கழகக் கல்விப்பீடத்தின் அனுசரணையுடன் இப்பரீட்சை நடாத்தப்படவுள்ளது. வடமாகாணத்தில் 94 பாடசாலைகளிலும், கிழக்கு மாகாணத்தில் 94 பாடசாலைகளிலும் இப்பரீட்சை நடைபெறுமென வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.வே.தி.செல்வரத்தினம் தெரிவித்தார்.

(116)

# சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. கூட்டு சாத்தியமில்லை என்கிறார் பௌஸி

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் கூட்டணி அமைக்கப்படாது என்று பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி சமாதானத்தை விரும்பும் ஒரு கட்சியாகும். ஆனால், ஜே.வி.பி. அப்படிப்பட்டதொரு கட்சியல்ல. இரு கட்சியினருக்கும் இடையில் கூட்டணி ஏற்பட்டால் மக்கள் எம்மீது சந்தேகம் கொள்வார்கள்.

இந்தக் கூட்டணி குறித்து சுதந்திரக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தில் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் பௌசி மேலும் தெரிவித்தார்.

### அரசியல்வாதிகள்

# பொய்வாக்குறுதி வழங்குவதை தடுக்கப் புதிய சட்டம் விரைவில்!

(கொழும்பு)

தேர்தல்களின்போது அரசியல்வாதிகள் பொதுமக்களுக்குப் பொய்யான வாக்குறுதிகள் வழங்குவதைச் சட்டங்கள் மூலம் தடுக்க நடவடிக்கை எடுக்கப்போவதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் கொமன்வெல்த் நாடுகளின் பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றியபோதே இவர் இதனைத் தெரிவித்தார்.

மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதற்குத் தெளிவான விளக்கம் கொடுக்க வழிவகைகள் செய்யப்படவேண்டும். அரசியல்வாதிகள்- மக்களிடம் சென்று நேர்மையான வகையில், நிறைவேற்றக் கூடிய வாக்குறுதிகளை வழங்க வேண்டும் என்றும் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கரமசிங்க,

அரசின் கொள்கைகளில் காணப்படும் தவறுகள் குறித்து பொதுமக்கள் நேரடியாகப் புகார் செய்வதற்கு வசதியாகப் புதிய நாடாளுமன்றப் பட்டயச்சட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

# கிருமிநாசினிக் கழிவுக் கொள்கலன்கள் உடனடியாக அழிக்க நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் இறக்கப்பட்ட கிருமிநாசினிக் கழிவுகள் அடங்கிய கொள்கலன்களை அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் மற்றும் மத்திய சூழலியல் அதிகாரசபையின் கண்காணிப்பில் அழிக்க நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் - துறைமுக அதிகாரசபைக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

சூழல் பாதுகாப்பு அமைப்பு ஒன்று, மேற்படி கொள்கலன்களில் உள்ள இரசாயனப் பொருட்கள் சுற்றுச் சுழலுக்கு ஆபத்தானதென - நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கை விசாரித்தபோதே நீதிவான் இத் தீர்ப்பை வழங்கினார்.

இந்த இரசாயனங்கள் சூழலுக்கும், பொதுமக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும், கிருமி நாசினிக் கழிவுகள் முழுமையாகப் பிரிகையடைந்துள்ளதால் உடனடியாக அழிக்கப்பட வேண்டும் என்றும் சூழலியல் நிபுணர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

இதேவேளை, இந்தக் கொள்கலன்கள் இன்னொரு கப்பல் மூலம் அப்புறப்படுத்தப்படவுள்ளதாகத் துறைமுக அதிகாரசபை அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

### கொழும்பில்

# விபசார விடுதிகளாக இயங்கிய மூலிகை மருத்துவ நிலையங்கள்

கொழும்பில் இயங்கிவந்த ஐந்து மூலிகை மருத்துவ நிலையங்கள் முழு அளவிலான விபச்சார மையங்களாக இயங்கிவந்துள்ளமை பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இங்கு பணியாற்றிய சீன, தாய்லாந்து பெண்கள் விபசாரத்தில் ஈடுபட்டு வந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். இதையடுத்து இவ்விடுதிகளின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த நிலையங்களில் அக்குபஞ்சர் சிகிச்சையளிக்கப்படுவதாகப் பத்திரிகைகள் மூலம் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது எனவும், இதற்கான அங்கீகாரத்தை முதலீட்டுச் சபை வழங்கியிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



அண்மையில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதமவிருந்தினர்களாக கலந்துகொண்ட வலயக்கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், அவரது பாரியார், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் கல்லூரி அதிபர், ஆசிரியர்களினால் அழைத்துவரப்படுகின்றனர்.

# எண்ணெய்க் குத ஊழியர்கள்
# வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

(திருகோணமலை)

திருகோணமலை எண்ணெய்க் குதத் தொழிலாளர்கள் நடத்திவந்த வேலைநிறுத்தம் கைவிடப்பட்டிருக்கிறது. ஊழியர்களுக்கும், எண்ணெய்க்குத நிர்வாகத்தைப் பொறுப்பெடுத்துள்ள இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனத்துக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்பாட்டை அடுத்தே வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

புதிய நிர்வாகம் - ஊழியர்களின் அனைத்துக்கோரிக்கைகளையும் ஏற்காதபோதிலும், வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது. அரச நிர்வாகத்திலிருந்தபோது கிடைத்த அனைத்து வசதிகளும் தமக்குத் தொடர்ந்து வழங்கப்பட வேண்டுமென ஊழியர்கள் கோரிவந்தனர்.

மருத்துவகொடுப்பனவு, உணவுக் கொடுப்பனவு, பயணக் கொடுப்பனவு, மேலதிக நேரக்கொடுப்பனவுகளை வழங்கப் புதிய நிர்வாகம் இணங்கியுள்ளது. எனினும், ஊழியர்களுக்கு இன்னமும் நியமனக் கடிதங்கள் வழங்கப்படவில்லை.

முன்னதாக இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம்- ஊழியர்கள் அனைவருக்கும் நியமனக் கடிதங்கள் வழங்கப்படுமென உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(க)


## வாழ்க வளமுடன்

### நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஐந்தாவது அகவையில் HAPPY BIRTHDAY



பெயர் : ஸ்.ஷர்மில் சஜித்
முகவரி: 10 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------

முகவரி:------------------------

பிறந்த ஆண்டு:------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்

## வெளிவாரிப் பரீட்சை திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப் படிப்பு மாணவர்களுக்கு நடைபெறவிருந்த பரீட்சைத் திகதிகளில் மாற்றம் செய்யப்படுள்ளதாகப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் பிரிவு அறிவித்துள்ளது.

வணிகமாணி (வெளிவாரி) பகுதி 1 இற்கு 3 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த பரீட்சை - 5 ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும்,

3 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த நுண்பொருளியல் பரீட்சை- 12 ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ச)

## நீரிழிவு நோய் DIABETES

பகுதி 31 - ச.ஆ.கோபாலமூர்த்தி.

(தொடர்ச்சி)

### குடற்புழுத்தொற்று நீரிழிவுநோயாளருக்கு ஏற்படுத்தும் பாதிப்புகள் ...

நாய்களை வீதியில் மலங்கழிக்கவிட்டு வீதியை அசுத்தப்படுத்திய நாய் வளர்ப்போர், நாய்மலக்குவியல்களின்மேல் சிறிதளவு மண்ணைக் கொட்டிவிட்டு, அதே வீதியில் நின்று பந்தெறிந்தும், கிரிக்கெட் அடித்தும் விளையாடுகிறார்கள். இவ்வாறு பந்து விளையாடும்போது, வீதிகளில் பந்துகள் உருளும். நாய் மலத் துகள்களும், நாயின் குடற்புழு முட்டைகளும மண்ணுடன் சேர்ந்து இப்பந்துகளில் ஒட்டியிருக்கும் வாய்ப்பு உண்டு. உயரத்தில் இருந்து வரும் பந்தைப் பிடிக்கும் வேளைகளில், இப்புழுமுட்டைகள் பந்துபிடிப்பவரது முகத்திலும், உதடுகளிலும் (வாய்திறந்த நிலையில் இருந்தால் வாயினுள்ளும்) சொரியும் வாய்ப்புண்டு. இவ்வாறு வாய்வழியாக உட்புகுந்த நாய்க் குடற்புழுமுட்டைகள் பொரித்ததும், தமது வாழ்க்கை வட்டத்தைப் பூர்த்திசெய்யமுடியாத மனித உடலினுள் தாங்கள் நுழைந்து விட்டதை உணர்ந்து தடுமாறும். தமது வாழ்க்கை வட்டத்தைப் பூர்த்தி செய்யக்கூடிய நாயின் உடலைத்தேடி உள்ளுறுப்புக்களை எல்லாம் ஊடறுத்து அங்கும் இங்கும் திரியும். சில உறுப்புகளுள் இறக்கவும் கூடும். இவை ஊடறுத்துச் செல்லும் உறுப்பைப்பொறுத்து, நோய்க்கான காரணம் கண்டுபிடிக்க முடியாத பல நோய்கள் தோன்றலாம். ஈரலை ஊடறுத்துப் பாதிப்பை ஏற்படுத்தினால் ஈரல் நோய்களும் மூளையை ஊடறுத்துப் பாதிப்பை ஏற்படுத்தினால் வலிப்பும், கண்களை ஊடறுத்துக் கண்களைப் பாதித்தால் பார்வை இழப்பும், சிறுநீரகத்தை ஊடறுத்து பாதிப்பை ஏற்டுத்தினால் சிறுநீரக நோய்களும கர்ப்பிணிகளின் சூலகங்களின் ஊடாகச்சென்று சூலகங்களில் பாதிபபை ஏற்படுத்தினால் மலட்டுதன்மையும், கருவிலிருக்கும் குழந்தையின் கண்களிற்கு ஊடாகச் சென்று பாதிப்பை ஏற்படுத்தினால் குருட்டுக்குழந்தை பிறக்கவும் வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது. நாய் மலத்தில் இருக்கும் தோல் உழும் (தோள்துளை) புழுக்களின் (CUTANIOUS LARVA MIGRANS) முட்டைகள் வீதிகளிலேயே பொரித்துப் புழுக்களாகக் காணப்படும். மென்மையான தோல் இவற்றுடன் தொடுகையுறும்போது மனிதரில் தொற்றும். இவை தமது வாழ்க்கை வட்டத்தை மனிதரில் பூர்த்திசெய்ய முடியாது. இதனால் தோலின் கீழ் அங்கும் இங்கும் திரிந்து சொறிவையும் எரிவையும் ஏற்படுத்தும். சொறிவினால் புண்கள் ஏற்படலாம். இந்த நோயை ஒழிப்பதற்கு மருந்து இல்லாமையால் மின்சாரச் சூட்டுக்கோலினால் சுடப்பட்டு இவைகள் கொல்லப்படுகின்றன. இச்சிகிச்சையில் தோலும் எரிக்கப்படுவதால், புண்கள் ஏற்பட்டு நீரிழிவு நோயாளரை வதைக்கும்.

### இலாபகரமாக மருந்து வாங்குவதற்குச் செய்யவேண்டியவை

முழுஆடைப் பால் பல்வேறு கம்பனிகளால் தயாரிக்கப்பட்டு, பல்வேறு விலைகளில் விற்கப்படுகின்றன. சக்தி, அங்கர், றெட்கவ், கிறிகோல்ட், நெஸ்பிறே, லக்ஸ்பிறே, எவ்றிடே, மலிபன் என்பன முழு ஆடைப் பால்மாவின் வியாபாரப் பெயர்களாகும். இவற்றுள் சக்தி (400 கிராம்) மிகவும் விலை குறைந்தது. இதன்விலை ரூபா 100 மாத்திரமே. முழுஆடைப்பால் தயாரிப்புக்கள் என்ன இருக்கின்றன? ஒவ்வொன்றின் விலையும் என்ன? எனக்கேட்டு விலை குறைந்ததை வாங்குவதுபோல், ஆட்டாமா தயாரிப்புக்களுள் குறைந்தவிலையில் (பைக்கற் ஒன்று 35 ரூபா வீதம்) விற்கப்படும் பிறிமா ஆட்டாமாவை வாங்குவதைப்போல மருந்துகளின் வியாபாரப் பெயர்களை எழுதுவிப்பதைத் தவிர்த்து, அவற்றின் மருந்துப் பெயர்களை எழுதுவித்து, அந்த மருந்தில் குறைந்தவிலையில் விற்கப்படும் தயாரிப்பை வாங்குவது இலாபகரமானது. மருந்துகள் தரக்கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்படுவதால் விலைகுறைந்த மருந்து தரங்குறைந்தது எனக் கூறமுடியாது.

தொடரும்....




நமது ஈழநாடு வழங்கும்




# உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: **இரத்தினம்ஸ்**

[இரத்தின கோபால்ஸின் இணைந்த நிறுவனம்]

30, சிறாம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்

அசோசியேட்டட் மோட்டார் வெய்ஸ்ஸின் (AMW) அங்கீகரிக்கப்பட்ட யமஃகா, மோட்டார் சைக்கிள்கள், வெளி இணைப்பு இயந்திரங்களின் யாழ்ப்பாண விற்பனை முகவர்.

இரண்டாம் பரிசு - 15,000

வழங்குவோர்: **1. ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்**

YONEX MULTI PALACE

விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.

76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்



**2. சமுத்திரா ரேட்ஸ் (லிமிட்டட்)**

டீசல் என்ஜின், நெல் குற்றும், மா அரைக்கும் இயந்திரங்கள், உதிரிப்பாக விற்பனையாளர்கள்.

3/2 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

மூன்றாம் பரிசு - 10,000

வழங்குவோர்: **சந்தியா மல்ரிகோட்யாட்**

531, பருத்தித்துறை வீதி, நல்லூர். பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

Fancy goods, gift items, fevicryl & acron paint items.

நான்காவது ஆறுதல் பரிசு

வழங்குவோர்: **ரூவி இன் ரூாஜ் சில்க்ஸ்**

77, பெரியகடை, யாழ்ப்பாணம்.



இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்!
வினாக்கொத்துக்கு விடை தந்து பரிசுகளை
அள்ளிச் செல்லுங்கள்!!

## உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

### வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது?
(....................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது?
(....................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன?
(....................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்?
(....................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது?
(....................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ------------------------

வயது: ------------------------

முகவரி: ------------------------

------------------------



*சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.*

*போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.*




# பெண்களின் முன்னேற்றத்துக்கு சட்டத்தின் பாதுகாப்பு

*மாநகரசபை, மக்கள் வங்கி ஆகியவற்றின் சட்ட ஆலோசகரும், சமாதான நீதவானும், உத்தியோகப் பற்றற்ற நீதிவானும், சட்டத்தரணியுமான லிங்கா துரைராஜாவுடனான நேர்காணல்.*

*கேள்வி:-* பெண்களுக்குச் சட்டம் எந்தவகையில் பாதுகாப்பை வழங்குகிறது?

*பதில்:-* சமூகத்தில் பெண்கள் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது எளிதில் பாதிக்கப்படக்கூடிய மென்மைத் தன்மையைக் கொண்டவர்கள் என்ற காரணத்தினால், சட்டம் கொஞ்சம் பாதுகாப்பைப் பெண்களுக்கு, அதாவது ஆண்களுக்கு கோபம் வரக் கூடிய வகையில் வழங்குகிறது.


லிங்கா துரைராஜா

ஆண்களுக்கு உடற் பலம் இருக்கிறது. அத்துடன் ஆண்மை என்ற சொல்லால் பெண்களை அடிமைப்படுத்தும் தன்மை இருக்கிறது. அதற்காகப் பெண்களுக்குச் சட்டரீதியாகச் சில வாய்ப்புக்களை, பாதுகாப்புக்களை வழங்கவேண்டும் என்ற காரணத்துக்காக மட்டும் சட்டத்துக்கு முன் அனைவரும் சமம் என்ற கோட்பாட்டிலிருந்து சட்டம் கொஞ்சம் கீழே இறங்குகிறது.

உதாரணத்துக்குத் தாபரிப்புச் சட்டம் என்ற ஒருசட்டத்தை எடுத்துக்கொள்ளலாம். பொதுவாக ஆண்கள்தான் உழைக்கும் திறன் உள்ளவர்கள், பெண்கள் வீட்டுப் பணிகளிலும், குழந்தை பராமரிப்பிலும் ஈடுபட வேண்டியவர்கள் என்ற காரணத்தாலும் அவர்களுக்கான பணவசதிகளை வழங்காது விட்டால் - குடும்பத்தையோ, வீட்டையோ பாதுகாக்க முடியாது.

இதற்காகவே தாபரிப்புச் சட்டமானது தன்னைத்தானே பராமரிக்கக்கூடிய நல்ல பணவதியுள்ள ஒரு கணவன் அல்லது குடும்பத்தலைவன் கட்டாயமாகக் குடும்பத்தைப் பராமரிக்கக் கடமைப்பட்டவன் என்று சொல்லுகிறது. இதில் தவறுபவர்கள், வழக்குக்கு உள்ளாக்கப்பட்டு பராமரிப்புச் செலவு கட்டவேண்டும் எனச்சொல்லப்படுகிறது.

ஆனால், இந்தநிலை இன்றைக்கு இப்படியே இருக்கிறதா? என்று பார்த்தால் மாறவேண்டிய காலம் வந்துவிட்டது என்றே சொல்லலாம். ஏனெனில், இன்று பெண்களும் ஆண்களுக்கு நிகராக உழைக்கத்தொடங்கிவிட்டார்கள். இந்த நிலையை வைத்துப் பார்க்கும்போது பெண்களும் சட்டமும், சட்டத்தில் பெண்கள் எனப் பழைய விடயங்களையெல்லாம் பேசுவது தேவையற்ற ஒன்று என்றே நான் கருதுகிறேன்.

இதைச் சட்டமும் உணர்ந்ததால்தான் தாபரிப்புச் சட்டம் ஆரம்பத்தில் இருந்ததுபோல் பெண்களைத் தந்தை அல்லது கணவன் பேணவேண்டும் என்ற நிலைமையை மாற்றி, அந்தச் சட்டத்தில் திருத்தம்கொண்டு வந்திருக்கிறார்கள். அதாவது தன்னைத்தானே போதியளவு பராமரிக்கக்கூடிய பணநிலை உள்ளவர் - துணைவரே பாதுகாத்து, பராமரிக்கவேண்டும் என்று சட்டத்தையே மாற்றி அமைத்திருக்கிறார்கள்.

இது ஓரளவு எங்களால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும், ஏற்றுக்கொள்ள வேண்டியதாகவும் இருக்கிறது.

ஏனெனில் - சில இடங்களில் உழைப்பில்லாத கணவனும், உழைப்புள்ள மனைவியும் இருக்கிறார்கள். அந்தக் கணவன், வீட்டிலிருந்து குழந்தைகளைப் பராமரிக்கவோ மற்றும் பக்க உதவிகளைச் செய்வதற்கோ ஏற்ற நல்ல கணவராக இருக்கிறார். அல்லது இருக்கவேண்டும். அந்த நேரங்களில் பெண்தான் கணவனுக்கு பராமரிப்புச் செலவு தரவேண்டி இருக்கும். ஆனாலும்கூட இலங்கையைப் பொறுத்தளவில் நாங்கள் அறிய, பெண்களுக்கெதிராகத் தாபரிப்பு வழங்குப்போட்டு எந்தக் கணவனும் காசு பெறவில்லை என்பதை குறிப்பிடவேண்டும். எது எவ்வாறிருந்தாலும், சட்டத்தில் பெண்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படுவதற்காக அது தன்னை இசைவாக்கிக் கொண்டால், காலப்போக்கில் - எதிர்காலத்தில் பெண்களுக்குச் சட்டப் பாதுகாப்பு தேவையா என்பது பற்றிய விவாதங்கள் - சட்டத்தின்முன் எல்லோரும் சமம் என்ற ரீதியில் கிளம்பலாம்.

*கேள்வி:-* விவாகரத்து வழக்குகள் எந்தளவுக்குப் பெண்களுக்குச் சார்பாக அமைகின்றன?

*பதில்:-* மணவிலக்கு என்பதைப் பொறுத்தளவில் சட்டரீதியாகப் பதிவு நடப்பதனால், மணவிலக்குக் கேட்டால் மட்டுமே அது சட்டரீதியாக அளிக்கப்படும்.

மணவிலக்கு வழக்கைப் பொறுத்தளவில் கட்டாயம் முதலில் மனைவிதான் வழக்குப் போடவேண்டும் அல்லது கணவன்தான் வழக்குப் போடவேண்டும் என்றில்லை. இருந்தாலும், அதிலும் சட்டம் பெண்களுக்குச் சிறிய வசதியைச் செய்துகொடுக்கிறது.

பொதுவாகப் பெண்தான் கணவனால் பாதிக்கப்படுகிறாள், அவளுக்குத்தான் வழக்குத் தொடர்கிற வாய்ப்புக்கள் தேவையாக அல்லது அவசரமாக இருக்கிறது என்பதை எடுத்துக்கொண்டும் - உழைப்பில்லாத மனைவி என்பதை மனதில் வைத்துக்கொண்டும் - நீதிமன்றங்கள் கணவனாலேயோ, மனைவியாலேயோ விவாகரத்து வழக்குத் தொடரப்படும்போது முதல் தவணைக்கு கணவன் வழக்காளியாகவோ, எதிராளியாகவோ இருந்தாலும், மனைவியின் செலவுக்காக 1000 ரூபாவை கணவனே வழங்கவேண்டும்.

ஏனெனில், மனைவி அந்தப் பணத்தைக் கொண்டுதான் வழக்கை ஆரம்பிக்கவோ அல்லது எதிர்த்து வழக்கைத் தொடரவோமுடியும் என்கிற வாய்ப்பை மனைவிக்கு நீதிமன்றம் வழங்குகிறது.

குறிப்பிட்ட மனைவி பணவசதி உள்ளவராகவோ, உழைக்கிற மனைவியாகவோ இருந்தாலும், வழக்கைப் பொறுத்தளவில் சட்டப்படி மனைவிக்கு கணவன் வழக்காடுவதற்கான செலவினத்தைக் கொடுக்கவேண்டும் என்பதே சட்டமாகும்.

இந்த வழக்கைப் பொறுத்தளவில் குழந்தைகளுடைய பாதுகாப்புப் பற்றியும் கட்டாயமாகக் கவனிக்கப்படுகிறது. அதேவேளை - விவாகரத்துக்குப் பெண்கள் வருவதற்குப் பல காரணங்கள் இருக்கலாம், கணவனின் குடிப்பழக்கம் அல்லது அவனுடைய கொடுமை அல்லது அவனுடைய ஆண்மையின்மை எனப்பல காரணங்கள் இருந்தாலும், சில சந்தர்ப்பங்களில் பெண்களினுடைய தவறான நடத்தைகள் கூட மணவிலக்குக்குக் காரணமாகின்றன என்பதைக் கவனத்தில் கொள்ளவும் வேண்டும்.

எதுவாயினும் மணவிலக்கு வழக்குகளில் உண்மை எதுவெனக் கண்டறிய வேண்டியிருப்பது முதற்படியாகும். இதற்காக குடும்ப ஆலோசகர்களிடம் நீதிபதிகள் இந்தப் பொறுப்பைக் கையளித்து, கணவன் - மனைவி இருவரையும் அவர்களிடம் அனுப்புவர். அங்கு கணவன் - மனைவியுடன் குறிப்பிட்ட உத்தியோகத்தர் வீட்டிலிருந்து சகஜமாக உரையாடுவது போன்று எந்தவொரு பயமமின்றி தெளிவாகவும், முழுமையாகவும், ஆழமாகவும் கதைப்பர். அப்படிக் கதைக்கும்போது சில மறைக்கப்பட்ட உண்மைகள், வெளியில் சொல்லப்பட முடியாத சம்பவங்கள் வெளியில்வரும். இதன்படி மணவிலக்கு உறுதியானால், குழந்தையை யார் வளர்ப்பது என்ற பிரச்சினைக்கு முடிவுகாண வேண்டிவரும். கணவன், மனைவியுடன உரையாடிய குடும்ப ஆலோசகர் சமர்ப்பிக்கும் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைக் கொண்டு குழந்தையை யாரிடம் கொடுப்பது என நீதிமன்றம் தீர்மானிக்கும். தாய் குழந்தையை வளர்க்கலாம் அல்லது தந்தை வளர்க்கலாம். தந்தை உத்தியோகத்தராக அல்லது வெளியூரில் வசிப்பவராக இருந்தால் குழந்தை பேரன் பேத்தியிடம் ஒப்படைக்கப்படும். அவர்களும் திருப்திகரமாக இல்லாது காணப்பட்டால், சிறுவர் நலன் காக்கும் அமைப்புக்களிடம் குழந்தை கையளிக்கப்படும். இதன் மூலம் குழந்தையின் நலனும், பண்பாடும் பாதுகாக்கப்படும். ❧

*சந்திப்பு – கலா, உஷா*

## அன்பின் சிந்திக்கு! ஓர் மனந் திறக்கும் மடல்




சிந்தி,

நீ மகளிர் மேம்பாடு பற்றிய கருத்தரங்கொன்றில் பங்குகொள்ளவும், அதைத் தொடர்ந்து சில நாடுகளில் மகளிர் முன்னேற்றம் பற்றி தெரிந்துகொள்ளவும், பங்குனி இரண்டாந்திகதி புறப்படப் போவதாக எழுதியிருந்தாய். மிக்க மகிழ்ச்சி.

இதன் பின்னர் நீ திரும்பிவந்ததும் எம்நாட்டு மகளிர் பல வகைகளிலும் முன்னேற்றங்காண வழிகாட்டுவாய் என எதிர்பார்க்கிறேன்.

கருத்தரங்குகளில் பங்குகொள்வதும், ஆய்வுகள் செய்வதும் எந்தப் பயனுமற்றுப் போவதைப் பல சந்தர்ப்பங்களில் நாம் காணுகிறோம். இவை சமுதாயத்திற்கு உண்மையான பயனைத் தரவேண்டும்.

மார்ச் எட்டாந்திகதி சர்வதேச மகளிர் தினம் என்பதால் இப்பொழுதே பல ஆரவாரங்கள் தொடங்கிவிட்டன. வருடா வருடம் இத்தினம் பல இடங்களில், பல்வேறு விதங்களில் கொண்டாடப்படுகிறது. அதனால் பயன் கிட்டியதா? என்பதுதான் கேள்விக்குரிய விடயம். பல இடங்களிலும் வருடம் ஒருமுறை கூட்டம் நடத்துவதுடன் மகளிர் முன்னேற்றம் முடிவு கண்டு விடுகிறது.

உனது பயணம் அப்படி முடிந்துவிடக்கூடாது.

காலங்காலமாக ஒரே விடயத்தைப் பற்றி பேசுவதும், எழுதுவதுமாக இருக்கிறோம். அதன் பயனாக சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளனதான். ஆனால் போதியளவில்லை என்பதுதான் எனது ஆதங்கம்.

உதாரணமாக இந்தச் சீதனம் பற்றி எவ்வளவு பேசுகின்றோம். பயனென்ன கண்டோம். சில விடயங்களில் மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன.

முன்னர் பெண்கள் எட்டியும் பார்க்காத துறைகளில் இன்று ஒரு சிலர் கால்பதித்திருக்கிறார்கள். ஓரிருவர் சில துறைகளில் முத்திரையும் பதித்திருக்கிறார்கள்.

அதற்காக மகிழ்ந்தாலும், இத்துடன் திருப்திப்படமுடியாதநிலையே காணப்படுகிறது. போதிய ஊக்குவிப்பும், பெண்கள் அத்துறைகளில் ஈடுபடும்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு எப்படித்தீர்வுகாணலாமென்பதற்குரிய ஆலோசனைகளை வழங்கலும் இத்துறைகளில் பெண்கள் அதிகளவு ஈடுபடச்செய்யும்.

இவ்வளவு காலமும் உன்னுடன் கொண்டிருந்த கடிதத் தொடர்பு பெரும் உற்சாகமளிப்பதாக இருந்தது. நீ வெளிநாடு செல்வதால் இந்தக் கடிதத்தொடர்பை நிறுத்த வேண்டியேற்பட்டுவிட்டது. நீ திரும்பியதும் மீண்டும் எழுதுவாயென எதிர்பார்க்கிறேன்.

அன்புடன்
யோசி.

## கவிதைச் சோலை

### புதுவரவில் புதுவாழ்வு மலர்கின்றது

தித்திக்கும் சமாதானமே
தத்திவரும் மழலை கூட - உன்
நாமம் கேட்கையில் மத்தாப்பாய் சிரிக்கின்றது
போர் மறைந்தது சமாதானம் மலர
போற்றுகிறது தமிழர் நெஞ்சம்.
எம் தாய் மண்ணாம் தமிழ் மண்ணில்



சமாதானப்பூ மலர்ந்து மணம் வீசப்போகின்றது.
கடந்த கால கசப்பான நினைவுகளை
கத்தரித்துவிட்டு - ஒரு
புதுயுகத்தை நோக்கி வீறுநடை போடுகிறது.
தமிழ் இனம்.
இத்தனை மாற்றங்களும் உன்னால் தான்
வந்தது.
தித்திக்கும் சமாதானமே - நீ
நிரந்தரமாய் எம்முடன் உறவாடு
திசையெட்டும் தீபமேற்றி தீந்தமிழ் பாடுவோம்.
தமிழ் ஓசை காதில் விழ சமாதானம் வருகிறது.
கனிவான நற்காலமிங்கே கண்முன்னே தோன்றியிருக்க
கனிவான செய்தி சொல்ல - என்றும்
இன்புடன் நாமிருக்க சமாதானம் வருகிறது.

கதிரமலை ஷோபா

## அவர்கள் பார்வையில்...

*எனக்கு -*
*முகம் இல்லை*
*இதயம் இல்லை*
*ஆத்மாவும் இல்லை*



*அவர்களின் பார்வையில் -*
*இரண்டு மார்புகள்*
*நீண்ட கூந்தல்*
*சிறிய இடை*
*பருத்த தொடை*
*இவைகளே உள்ளன.*

*சமையல் செய்தல்*
*படுக்கையை விரித்தல்*
*குழந்தை பெறுதல்*
*பணிந்து நடத்தல்*
*இவையே எனது கடமைகள் ஆகும்.*

*- கற்பு பற்றியும்*
*மழை பெய்யெனப் பெய்வது பற்றியும்*
*கதைக்கு*
*அவர்கள்*
*எப்போதும் எனது உடலையே*
*நோக்குவர்.*
*கணவன் தொடக்கம்*
*கடைக்காரன் வரைக்கும்*
*இதுவே வழக்கம்.*

*- அ. சங்கரி*

# பெண்ணாகி வந்த பூங்காற்று

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

பிறந்த குழந்தை ஆணாக இருந்தால் அக்குழந்தையைப் பார்க்கப் போகிறவர்கள் எல்லோரும் நீலநிற உடுப்புகள் வாங்கிக் கொடுப்பர். நீலம் வானத்தின் நிறம். கடலின் நிறம். ஆண் என்பவன் பரந்து விரிந்த எண்ணங்களோடு வலிமை நிறைந்தவனாக உருவாகப்போகிறான் என்பதை அது சுட்டுகிறது. பிறந்தது பெண் குழந்தையாயின் றோஸ் நிற உடுப்புகள் வழங்கப்படும். அவள் றோஜாமலர்போல அழகாகவும், மென்மையாகவும் இருப்பாள் என்ற எண்ணக்கரு அதனுள் மறைந்துள்ளது.

குழந்தை படிப்படியாக வளர்ந்து வரும் போது இத்தயாரிப்பு வேலைகளும் தொடரும். வாகனங்கள், பந்து, பிலிங் புளொக்ஸ் போன்றவை ஆண் குழந்தையின் விளையாட்டுப் பொருட்களாக - பொம்மை, சமையல் பாத்திரங்கள் போன்றவையே பெண் குழந்தைக்குரியவும். குழந்தைக்கு அணியப்படும் உடை அமைவிலே, தலை இழுப்பு முறையிலே, தலை மயிர் வளர்க்கும் முறையிலே, உணவிலே என்று எல்லா இடமும் வேறுபாடு தெரியும். பெண்பிள்ளைகள் நகைகள் இடப்பட்டு, முகத்திலே பொட்டு இடப்பட்டு, காலிலே சங்கிலி போடப்பட்டு அதிக அழகுணர்வுடன் வளர்க்கப்படுவாள்.

மிகச் சிறுவயதிலேயே ஆரம்பிக்கின்ற இத்தகைய சமூக மயமாக்கல் செயற்பாடுகள் பிள்ளையின் 'ஜென்டர்' (Gender) உருவாக்கும் முறையைத் தீர்மானிக்கின்றன. ஆகவே, நாம் விரும்பினால் இவற்றை மாற்றலாம். மாற்றுவதன் மூலம் பால்சார் உணர்வுகள், நடத்தைகளிலே பாரிய மாற்றங்களை ஏற்படுத்தலாம். அது சமூக வளர்ச்சியில் பெரும் முன்னேற்றத்தைக் கொண்டுவரும்.

ஆண், பெண் வேறுபாடு பிறப்பிலேயே தீர்மானிக்கப்படுகின்றதாயினும் பால் சார்ந்த உணர்வுகளும், நடத்தைகளும் சூழல் காரணிகளாலேயே முழுக்க முழுக்கத் தீர்மானிக்கப்படுகின்றன.

ஆண்பிள்ளை ஒன்று வளர்ந்து வருகின்றபோது அவனைச் சற்று இறுக்கமாகவும், வலிமையாகவும் பெற்றோர் கையாளுகின்ற போக்கும், பெண்பிள்ளையை மென்மையாகக் கையாளும் போக்கும்கூட, தான் உள ரீதியாகப் பலவீனமானவள் என்ற எண்ணத்தைப் பெண்ணுக்குள்ளே மீள வலியுறுத்தி வரும்.

ஏழு வயதுடைய ஆண்பிள்ளை ஒருவர் மரம் ஒன்றில் ஏறுவதைப் பெற்றோர் கவனிக்கிறார்கள் என்று வைப்போம். பெரும்பாலும் அந்த நடத்தைக்காக அவன் பாராட்டப்படுவான். "எங்கடை தம்பியைப் பாருங் கோவன்.. சின்ன வயதிலையே எவ்வளவு உயரம் ஏறிட்டான்..." என்று அவர்கள் சொல்லக் கூடும்.

ஆனால் அதே வயதுடைய பெண்பிள்ளை ஒருவர் இதேசெயலைச் செய்யும்போது அவர் பழித்துரைக்கப்படுவார்.

"எடி நீ பொம்பிளைப் பிள்ளை எல்லே?



இறங்கு கீழே... இப்பவே இப்பிடி யெண்டால், நீ வளந்தா என்ன எல்லாம் செய்யப் போறியோ?" என்பதே விமர்சனமாக இருக்கலாம். சூழலில் உள்ளவர்கள் வழங்கும் பாராட்டுக்களும், அவர்கள் வழங்கும் தண்டனைகளும், அவர்களின் நடத்தை முன் மாதிரிகளுமே பிள்ளைகளின் ஆளுமையை வடிவமைக்கின்றன.

### பாத்திர மாதிரிகள்

குடும்பம் ஒன்றிலே வளரும் பெண்குழந்தைக்கு அங்குள்ள அம்மா, அம்மம்மா, அக்காமார் போன்ற பெண்கள் பாத்திர மாதிரிகளாக அமைவர். அம்மா தன்னை அழகு படுத்தச் செலவுசெய்யும் நேரத்தை அவதானிக்கும் பிள்ளை, அழகாயிருத்தல் பெண்ணுக்கு முக்கியம் என்ற கருத்தேற்றத்தைப் பெறுகிறது. வீட்டில் ஒரு சிறுபிரச்சினையாயினும் தீர்க்கப்படுவதற்கு "அப்பா வரட்டும் பொறு" என்று அம்மா சொல்வதைக் கவனிக்கும் பிள்ளை - பிரச்சினை தீர்த்தல், தலைமை தாங்கல் பண்புகள் ஆணுக்கே உரியவை எனத் தீர்மானிக்கிறது.

அதேபோலவே வீட்டில் உள்ள அப்பா, தாத்தா, அண்ணன்மார் போன்றோர் ஆண் பிள்ளைக்குரிய பாத்திர மாதிரிகளாக அமைவர். அப்பா வெளியிடங்களுக்குப் போகும் போது தனியே போவதையும், அம்மா போகும்போது அபபாவின் துணையுடன் போவதையும் பல முறைபார்க்கும் ஆண் பிள்ளை, ஆண் தனித்தியங்கக் கூடியவன் என்ற முடிவைப் பெறுகிறான். நாங்கள் சாதாரணமாக எதிர் பார்ப்பதற்கு மேலாக மிக நுண்ணிய விடயங்களும், நடத்தைக் கூறுகளும் - வீட்டிலும், பாடசாலையிலும், சமூகத்திலும் உள்ள பெரியவர்களின் பாத்திர மாதிரிகள் ஊடாகவே பெறப்படுகின்றன என்று உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். ஆகவே தாய்மாரும், சகோதரிகளும், பெண் ஆசிரியர்களும் தமது ஆளுமையில் முன்னேற்றங்களைக் கொணடுவரும்போது அடுத்த சந்ததிப் பெண்கள் மத்தியில் விருத்தி ஏற்படுவது இலகுவாகும்.

### கலை இலக்கியங்களின் பங்கு

ஒரு சமூகத்தின் கலாசாரங்களையும், விழுமியங்களையும், நடத்தைப் பாங்குகளையும் சந்ததி சந்ததியாகக் காவிச் செல்பவை கலை இலக்கியங்கள்.

பெண்களுக்கு இருக்கக்கூடிய சுதந்திரத்தின் சில கூறுகளைச் சங்ககால இலக்கியப் பெண் பாத்திரங்கள் காட்டின. அப்பாத்திரங்கள் அரண்மனைக்குள்ளும், இல்லத்திற்குள்ளும் தமது நடமாட்டத்தைக் குறுக்கிக் கொள்ளவில்லை. தினைப்புலம், கடற்கரை, காடு, பாலைநிலம் என இவர்கள் ஓடித் திரிநதனர். ஆனால், இடைக்காலக் கலை இலக்கியங்களில் இந்தநிலை மாறத்தொடங்கியது. ஆண்களுக்கு அடங்கிப்போதலே கற்புநிலை என்ற பொருந்தாத கருத்தை இலக்கியப் பாத்திரங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தின.

மணம் செய்த பின் தன்னை விட்டு நீண்ட காலம் பிரிந்து வாழ்ந்த கோவலனை - வேறு ஒரு பெண்ணுடன் வாழ்ந்து பொருள் எல்லாம் தொலைத்த நிலையிலும், பணிவுடன் ஏற்றுக் கொள்ளும் சிலப்பதிகாரக் கண்ணகி இலக்கியங்களின் வகைமாதிரிப் பாத்திரமானாள். அக்காலம் முதல் இன்றுவரை பணிந்து அடங்கிப்போகும் பெண் பாத்திரங்களை உயர்த்திக்காட்டும் முயற்சியில் கலை, இலக்கியங்களும், சினிமாவும் ஈடுபட்டுவருவது, பெண் பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் முக்கிய செல்வாக்கைச் செலுத்திநிற்பது தடுக்க முடியாததாகிறது.

பெண்களின் உணர்வு விருத்தியையும் இவை பாதிக்கின்றன. உதாரணமாகப் 'பயம்' என்பது அடிப்படை மனித உணர்வுகளில் ஒன்று. அது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானது. விலங்குகள் எல்லாம்கூட உயிர் அச்சுறுத்தல் ஏற்படும்போது பய உணர்வை வெளிக்காட்டும். ஆனால் எமது இலக்கியங்கள் 'அச்சம்' என்பது பெண்ணின் இயல்பு என அழுத்தி வற்புறுத்தி வந்ததால் 'பயம்' ஏற்பட்டால் ஆண்பிள்ளை தனக்குள் வெட்கப்படுகிறான். 'பயம்' ஏற்படாவிட்டால் பெண் தன்னைக் குறைத்து மதிப்பிடுகிறாள். ஒரு சிறு கரப்பான் பூச்சியைக் கண்டாலும் மேசைக்கு மேல் ஏறிநின்று ஆண் ஒருவரைத் துணைக்கு அழைக்கும் நடத்தை பெண்கள் மத்தியில் ஒரு நாகரிகமாகவே பரவியுள்ளமை கூர்ந்து நோக்கத்தக்க விடயமாகும்.

### சமகாலத் தொடர்பு சாதனங்களின் பங்களிப்பு

மேலே காட்டப்பட்ட பல காரணங்களாலும் வடிவமைக்கப்பட்டு வரும் பெண்ணின் ஆளுமையைத் தொடர்பு சாதனங்கள் சங்கூதி வரவேற்கின்றன. தொடர்பு சாதனங்கள் பெரும்பாலும் பெண் பற்றிய படிமத்தை எதிர்மறைத் தன்மைகள் பொருந்தியதாகவும், சிறுமைப்படுத்தலுக்குரியதாகவுமே சித்திரிக்கின்றன. சோப்பு, சீப்பு, பவுடர், கிறீம் போன்ற அழகுசாதன விளம்பரங்களில் எல்லாம் பெண்களே தோற்றமளிக்க- எஞ்சின்கள், மருத்துவ உபகரணங்கள், விஞ்ஞானக்கருவிகள் போன்றவற்றை ஆண்களே கையாளுவதான படிமங்களே தொடர்பு சாதனங்களில் தொடர்ச்சியாகத் தோன்றும்.

பாலியல் வன்முறை என்பது மிகக் குறிப்பாகப் பெண்களைப் பாதிக்கிற நிகழ்வாக இருந்தும்கூட, அலங்கோலமாக ஆடை உடுத்திய பெண்களே வன்முறைக்கு உட்படுகின்றனர் எனக் காட்டமுனையும் தொடர்பு சாதனங்கள் - அச் சந்தர்ப்பத்திற்குக்கூடப் பெண் மீது பழியைப்போட முனைவது பெரும் கோபத்தை ஏற்படுத்தக்கூடிய செயறபாடு.

**கோகிலா மகேந்திரன்**

*தொடரும்...*

# பெற்றோர் - பிள்ளைகள் உறவுக்கு இருதரப்பு உரையாடல் வேண்டும்!

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

சில பெற்றோர்கள் சிலவேளைகளில் பிள்ளைகளில் பொறாமைப்படக்கூடும். ஏன்?. நான் நல்ல கிரிக்கெட் வீரனாக இளம் வயதில் இருந்திருந்தால், எனது மகன் என்னைவிட கிரிக்கெட் விளையாட்டில் கெட்டிக்காரனாக இருந்தால் பிள்ளையைப் பற்றிப் பெருமைப்படுவதோடு, சிலநேரம் பொறாமையும் ஏற்படலாம். இது பெற்றோருக்குத் தெரிவதில்லை. காரணம் சுயஅறிவு பலருக்கு இருப்பதில்லை. தாய் தன்னைவிட அழகான தனது மகளில் பொறாமையும் கொள்ளக்கூடும். சரீரரீதியிலேயே இது ஏற்படும். மன, அறிவு ரீதியாக ஏற்படுவதில்லை. அம்மாவைவிட மகள் அழகாக இருக்கிறாள் என்று யாராவது அம்மாவுக்கு முன் மகளைப் பாராட்டும்போது சிலரால் அதை ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. எல்லோரும் அப்படியல்ல. மன முதிர்ச்சி அடைந்தவர்கள், சுயஅறிவுடன் எந்நேரமும் செயற்படுபவர்கள் அப்படியல்ல. இதுவும் மோதலுக்குக் காரணமாகலாம்.

## வாழ்வில் வளர்ச்சி நிலைகள்; அறிதலும் புரிந்துகொள்வதும்

மேலும் எமது வாழ்வில் முழுமையாக்க முடியாதவைகள் இருக்கலாம். இதைப்பிள்ளையில நிரப்ப, நிறைவேற்ற முற்படுவர். துறவியாக ஆசையிருந்தும் துறவியாக முடியாமற்போன தந்தை -தனது பிள்ளையைத் துறவியாக்கி அதில் முழுமைபெற முனைவர். படிக்க முடியாத, டாக்டராக முடியாத, விரிவுரையாளராக முடியாத தந்தை- பிள்ளையை அப்படியாக்கி அதில் முழுமைபெற முனைவர். எமது வாழ்வில் செய்ய முடியாதவைகள் பல இருக்கும். இதைப் பிள்ளையில் நிறைவேற்ற முனைவர். அப்போதும் மோதல் வரலாம். நல்ல நோக்கத்திலேயே செய்வர். ஆனால் இது பிழை என்று தெரிவதில்லை. நாம் நல்ல நோக்கதத்தில் செய்யும் மடமையான வேலைகள், பிழைகள் பல உண்டு. இதைத்தேடிப் பார்க்கவேண்டும்.

மேலும், மோதலுக்கு மற்றொரு காரணம் பரம்பரை இடைவெளியாகும். முற்காலங்களைவிட இப்போது அகன்று செல்கிறது. முற்காலங்களில் மாற்றங்கள் ஏற்பட்டன. இருப்பினும் மிகச்சிலவே. ஆனால், இன்று அதிகமான வேகத்தில் எமது வாழ்வு மாறுகிறது. இந்த மாற்றத்தால் அப்பாவுக்கும், மகனுக்கும்- அம்மாவுக்கும், மகளுக்கும் இடையில் பரம்பரை இடைவெளி மிகவேகமாக நடைபெறுகிறது. உதாரணமாக, விவசாய யுகத்தில் அப்பா விவசாயியாக இருந்தால், பிள்ளை அப்பாவிடம் எப்படி விவசாயம் செய்வது? என்பதைக் கேட்டுச் செய்யமுடிந்தது. ஆனால் இன்று அப்படியல்ல. காரணம் விவசாயம மாற்றமடைந்துள்ளது. இன்று தற்கால விஞ்ஞான அறிவுகளை நாம் பெறவேண்டியுள்ளது. முன்பு போன்று பெற்றோர் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க முடியாதுள்ளது. கற்பித்தல முறைகளெல்லாம் மாறியுள்ளன, வேறுபட்டுள்ளன. இதனால் பரம்பரை இடைவெளி வேகமாக வளர்ந்துள்ளது சிலநேரங்களில் எமது பிள்ளைகள் எம்மிடம் ஓர் நடிகரின் படத்தை வாங்கித்தருமாறு கேட்பர். எமக்கு இப்போ உள்ள நடிகரைத் தெரியாது. காரணம் எமது காலத்து நடிகர் இன்றில்லை. எல்லாமே மாறிக்கொண்டு செல்கிறது.

இவ்வாறு மோதலுக்குப் பெற்றோரின் பக்கமும், பிள்ளைகளின் பக்கமும் காரணங்களுண்டு. இதனால் மோதல் ஏற்படலாம். மோதல் ஏற்படுவது பெரிய பிரச்சினையல்ல. ஆனால் ஓரளவு மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கவேணடும். அளவுக்கு மிஞ்சி காலையும், மாலையும் ஏற்பட்டால் அது நல்லதல்ல. சாதாரணமாக ஓரளவு மோதல் இருப்பது நல்லது. காரணம்



இதனூடாக தமது பக்கத்தை மட்டுமல்ல, பெற்றோர் சிந்திக்கும் பக்கத்தையும் பிள்ளைகள் காண்பர். மோதல் ஏற்படுவது நல்லது. மனம் நோகாத விதத்தில் பிள்ளைகளுடன் பெற்றோர் அதைப் பற்றி உரையாட வேண்டும். இது முக்கியமே. மோதல் இல்லையேல் பிள்ளையின் மனவளர்ச்சியில் ஏதோ சிக்கலுள்ளது என்பது அர்த்தம்.

சிறுவயதிலிருந்து பெற்றோருக்கும், பிள்ளைகளுக்குமிடையில் நல்ல தொடர்பு இருந்து வந்திருந்தால் இந்த வயதில் ஏற்படும் மோதலை வெற்றிகொள்வது அவ்வளவு கடினமானதல்ல. இந்த வயதிலுள்ள பிள்ளைகள் பெரும்பாலும் தமக்கு அவசியமில்லாதவற்றுக்காகவே பெற்றோருடன் மோதுவர் என்பதைப் பெற்றோர் மனதில் கொள்ளவேண்டும். அவசியமானது தேவையானது என்ற இரு வார்த்தைகளையும் எடுப்பின் - அவசியமானது என்பது; இல்லாமல் இருக்க முடியாத ஒன்று. கட்டாயத் தேவையைக் குறிக்கும். தேவையானது என்பது; கண்டதால், அழகாக இருப்பதால் - வேண்டுமெனக் கூறுவது. கடைக்குச் செல்லும் போது கடையில் சில பிளாஸ்ரிக் சாமான்களைத் தூக்கியிருப்பர். எல்லாமே அழகானவை. இவற்றைக் கண்டதும் வாங்க வேண்டுமென்ற ஆசை ஏற்படும். இவை அவசியமானவைகள் அல்ல. கண்டதும் ஆசை ஏற்பட்டவைகள். பிள்ளைகள் கேட்பதெல்லாம் அவசியமானவைகளா? அல்லது கண்டதால் கேட்கிறார்களா, என்று கலந்துரையாட வேண்டும். சில பொருட்கள் அவசியமாக இருக்கின்றதே என்பதற்காக வாங்குவதில்லை. மற்றவர்கள் எல்லோரும் பாவிப்பதால் தாமும் வாங்க வேண்டும் என்பதற்காக வாங்குவர். சில வேளைகளில் பெரியவர்களும் அப்படித்தான். சிலவேளைகளில் சேலை வாங்குவது அவசியமாக இருப்பதாலா? இல்லை பக்கத்து வீட்டுக்காரி வாங்கியதாலேயே!

ஆகவே, இந்த வயதில் ஏற்படும் மோதல் அழகாகத் தீாந்து, மனமுதிர்ச்சி அடைநத நிலைக்கு வருவர். அவர்களைப் புரிந்துகொண்டு அவர்களோடு ஏற்படும் மோதலில் கலந்துரையாடித் தீர்த்துவந்தால் மனமுதிர்ச்சியை நன்றாக அடைவர்.

*(அடுத்தவாரம் தொடரும்)*

**எஸ்.ஜே.யோகராசா**
**உளவளத்துணை ஆலோசகர்**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*அறிவுஉடையார் ஆவது அறிவார் அறிவுஇலார்*
*அ∴துஅறி கல்லா தவர்.*

*- திருக்குறள்*

# நமது நோக்கு

## உணவு!, உரிமை!, உஷார்!

தொற்றுநோய்களுக்கும், மேலும் பல வியாதிகளுக்[கு] காரணமாகும் உணவுப் பொருட்களின் சுகாதார [த]ன்மை பற்றிய செய்திகள் கடந்த சில வாரங்களாக மக்கள் மத்தியில் அடிக்கடி பேசப்படுவதை கேட்கக் கூடியதாக இருக்கிறது.

குறிப்பாக உணவகங்களிலும், இறைச்சி விற்பனைக்கூடங்களிலும், கொல் களங்களிலும், பழங்கள், சிற்றுண்டிகள் விற்பனை செய்யும் தெருவோரக்கடைகளிலும் - சுகாதாரம் பேணப்படும் தரம் மிகக் குறைவடைந்திருப்பதை - பரவலாக யாழ். மாவட்டம் முழுவதிலும் காணமுடிகின்றது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இவற்றின் மீது பரிசோதனைகளையும், கண்காணிப்பையும் மேற்கொண்டு வருகின்றபோதும் - இதனால் உரிய பலன்கள் விளைந்ததா என்பது சந்தேகமே என்று மக்கள் விசனப்படுகின்றனர்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் விஜயங்களைத் தொடர்ந்து ஓரிரு நாட்களுக்கு சுகாதாரமும், சுத்தமும் பேணப்பட்டாலும், பின்னர் - 'பழைய குருடி [க]தவைத் திறவடி' கதையாக, சுகாதாரச் சீர்கேடு[க]ள் தொடர்வதை மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சுகாதாரப்பிரிவினர் - யாழ்.நகரிலுள்ள உணவகங்களிலும், இறைச்சி விற்பனைக்கூடங்களிலும், தெருவோரக்கடைகளிலும் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டுவரும் பணிக்கு, இவ்விற்பனை நிலையங்களது உரிமையாளர்கள் - மக்கள் நலனை முன்னிறுத்தி ஒத்துழைத்தால் மட்டுமே, சுகாதாரத்தையும், சுத்தத்தையும் பேணக்கூடியதாக இருக்குமென்பது நிச்சயம்.

யாழ்.குடாநாடு அண்மைக்காலமாக தொற்றுநோய்களது பாதிப்புக்குள்ளான பகுதியாகி வருவதால், இவ்விடயத்தின் தீவிரத்தன்மையைக் கவனத்திற்கொள்வதும் அவசியமாகின்றது.

அதேவேளை - பொதுமக்களும் இவ்விடயத்தில் சுகாதாரப் பிரிவினருக்கு உதவ வேண்டியவர்களாகின்றனர்.

சுகாதாரமற்ற உணவகங்களை அறியும் பொது மக்கள், அவற்றைப் பற்றிய தகவல்களை உடனடியாக சுகாதாரப் பிரிவினருக்கு அறிவிக்கவேண்டும்.

அது மட்டுமல்லாது, சுகாதாரப் பிரிவினர் குறிப்பிட்ட உணவகங்கள் மீது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனரா எனக் கண்காணிப்பதும், இல்லாவிடில் - அவற்றைத் தட்டிக்கேட்பதும் தமக்குள்ள உரிமை என்பதை மக்கள் அறிய வேண்டும்.

இதேவேளை - மிக அண்மைக்காலமாக, சில உணவுப் பொருட்கள் மீது கொழும்பில், நுகர்வோர்துறை அமைச்சினால் தடை விதிக்கப்பட்டிருந்தும், அதே பொருட்கள் யாழ்.வர்த்தக நிலையங்களில் தொடர்[ந்து]ம் விற்பனைக்கிருப்பதையும் அவதானிக்க முடிகின்[ற]து.

குறிப்பாக - செயற்கை நொறுக்குத்தீனிகள் கொண்ட பைகளுடன், பிளாஸ்ரிக் அல்லது றபர் பந்துகளை இணைத்து விற்பனை செய்வதை மேற்படி அமைச்சு தடை செய்திருந்தும் - இப்பொருட்கள் யாவும் யாழ்ப்பாணத்தில் தங்குதடையின்றி விற்பனையாகியே வருகின்றன.

இந்தப் பிளாஸ்ரிக் அல்லது றபர் பந்துகளை - குழந்தைகள் உண்ணும் பொருளென நினைத்து அவற்றை உட்கொண்டு, அதனால் உயிருக்குப் போராடிய சம்பவங்களைத் தொடர்ந்தே இத்தடை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை - பாவனைத் திகதி முடிவடைந்த பண்டங்களின், குளிர்பானங்களின் விற்பனையும் தெற்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருப்பதுடன், பாவனைத் திகதி குறிப்பிடாத கொள்கலன் குளிர்பானமொன்றை அருந்திய மாணவன் ஒருவன் உயிர்ப்பலியுமாகியுள்ளான்.

தெற்கிலிருந்தான வர்த்தகப் பாதை திறந்துவிடப்பட்டதன் பின்னர் - யாழ்.குடாநாட்டிலும் இத்தகைய பண்டங்களும், குளிர்பானங்களும் நுழையாது எனக் கூறிவிட முடியாது.

எனவே - மக்கள் இவ்விடயங்களில் கூடிய அவதானம் செலுத்துவதோடு, நுகர்வோர் பாதுகாப்பை பேணுவதற்கான வலிமையான, பலமான கட்டமைப்புக்களையும் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

இதற்காக- நுகர்வோர் பாதுகாப்பு மன்றங்களை அமைக்கவும், அதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அக்கறையுள்ளோர் முன்வரலாமே...?

# வட-கிழக்கு உட்கட்டமைப்பு வசதிகள்; ஆராய வருகிறது ஜப்பானியக் குழு!

வட-கிழக்குப் பகுதிகளின் உட்கட்டமைப்புக் குறித்து நேரில் அவதானிப்பதற்காக ஜப்பானிய அரசாங்கத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிறுவனத்தைச் சேர்ந்த ஒன்பது அதிகாரிகள் வரவுள்ளனர்.

வட-கிழக்கிலுள்ள வீதிகள், நீர் விநியோகம், சுகாதார நிலைமை, வெள்ளக்கட்டுப்பாடு உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் குறித்து இந்த ஜப்பானிய அதிகாரிகள் நேரில் அவதானிக்கவுள்ளனர்.

இன்று கொழும்பு வரும் இந்த ஜப்பானிய அதிகாரிகள் மார்ச் 6 ஆம் திகதிவரை வட-கிழக்குப் பகுதிகளில் உள்ள நிலைமை குறித்து ஆராயவுள்ளனர். புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடலை நடத்தும் இவர்கள் - யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத் தீவுப் பகுதிகளுக்கும் விஜயம்செய்து அந்தந்த மாவட்ட அரச அதிபர்களுடன் பேச்சு நடத்துவர்.

இக்குழுவில் இடம்பெற்றுள்ளோர் விபரம் வருமாறு:- யாபபே, மற்சுனகா, சடமுறா, கசேகவா, சக்காய், யமனா, நசுகா, செற்றோ, மொறிகவா.

# புனர்வாழ்வு அதிகாரிகளுக்கு கணினிப் பயிற்சி வழங்கத்திட்டம்

(யாழ்பாணம்)

வட - கிழக்கில் பணிபுரியும் அரச அதிகாரிகளுக்கு விசேட கணினிப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

வட-கிழக்கில் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தி மற்றும், புனர்வாழ்வுப் பணிகளில் நேரடியாகப் பங்குபற்றும் அரச திணைக்களங்களின் அதிகாரிகளுக்கே இவ்விசேட கணினிப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

மேற்படி கணினிப் பயற்சித் திட்டத்தில் திட்டமிடல் அதிகாரிகள், திட்ட இணைப்பாளர்கள், எழுதுவினைஞர்கள் ஆகியோருக்கே பயிற்சி வழங்கப்படவுள்ளன.

இவ்வாறான பயிற்சிகள் மூலமாக அதிகாரிகளின் வேலை செய்யும் திறனை பன்மடங்காக அதிகரிக்கமுடியும் என்று புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர். (க)

# கணினிப் பிரயோக உதவியாளர் பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ள ஒரு வருட முழு நேர கணினிப் பிரயோக உதவியாளர் பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திகளுடன் மொழியுட்பட இரு தடவைகளிற்கு மேற்படாத க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் இந்தப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவுத்திகதியன்று 16 வயதுக்குக் குறையாமலும், 25 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதி மார்ச் 12 ஆம் திகதியாகும். மேலதிக விபரங்களுக்கு மாகாண முகாமையாளர், தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, இல.7 கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு தேசிய கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் மாகாண முகாமையாளர் பி.ராமநாதன் அறிவித்துள்ளார்.

# மத்தியகிழக்கு பணிப் பெண்களுக்கு ஒரே சீருடை, பயணப் பைகள்!

**வழங்க அரசாங்கம் நடவடிக்கை**

மத்தியகிழக்கு நாடுகளில் பணியாற்றச் செல்லும் இலங்கைப் பணிப் பெண்களுக்கு ஒரேவிதமான சீருடை வழங்குவது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது. பணிப் பெண்களுக்குத் தொழில்சார் தோற்றத்தை ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் இநத நடவடிக்கையை எடுக்கவுள்ளது.

இதேவேளை, வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தினூடாக மத்தியகிழக்கு நாடுகளுக்கு அனுப்பப்படும் பணிப்பெண்களுக்குப் பயணப் பைகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பணிப்பெண்கள் தமது உடைகளைச் சாதாரண சொப்பிங் பைகளில் கொண்டு செல்வதாகவும் - இது அவர்களுக்குத் தொழில்சார் கௌரவத்தை ஏற்படுத்தாது என்பதாலேயே அரசாங்கம் பயணப் பைகளை வழங்கத் தீர்மானித்துள்ளது.

**யு.என்.டி.பியின் ஏற்பாட்டில்**

# கடற்தொழிலாளர் சங்கங்கள் மூலம் கடனுக்கு கட்டுமரங்கள், வள்ளங்கள்

(வடமராட்சி கிழக்கு)

யாழ்.மாவட்டத்திலுள்ள இருபது கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 13 லட்சத்து இருபதினாயிரம் ரூபா பெறுமதியான 15 வள்ளங்களையும், 145 கட்டுமரங்களையும் யு.என்.டி.பி வழங்கியுள்ளது.

செட்டிபுலம், அல்லைப்பிட்டி, அராலி கிழக்கு, சாவற்காடு, கொட்டடி ஆகிய கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களுக்கு தலா மூன்று வள்ளங்களாக 15 வள்ளங்களும் -

எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, திருமுருகன், சென் ஜோசப், சென்.தோமஸ், சங்கானை, செம்பியன்பற்று, வத்திராயன், மருதங்கேணி, உடுத்துறை, ஆழியவளை, கட்டைக்காடு, தாளையடி ஆகிய கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தலா மூன்று கட்டுமரங்கள் வீதம் 45 கட்டுமரங்களும் வழங்கப்பட்டன.

இக்கட்டுமரங்களும், வள்ளங்களும் சுழற்சிமுறைக் கடனாகவே வழங்கப்பட்டுள்ளது. கட்டுமரம் 16 ஆயிரம் ரூபா பெறுமதியானதெனவும், வள்ளம் 40 ஆயிரம் ரூபா பெறுமதியானதெனவும் தெரியவருகின்றது. மாதாந்தம் பணத்தைச் செலுத்திமுடித்த பின்னர் இவை பயனாளிக்கே சொந்தமாகும். (17)

# கைத்தொழில் நிறுவனங்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலுள்ள கைத்தொழில் நிறுவனங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தப் பதிவுகளை மேற்கொள்வதன்மூலம் அரச உதவிகளைப் பெற வாய்ப்பாக இருக்குமென, கைத்தொழில் அபிவிருத்திச்சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் குடாநாட்டிலிருந்த கைத்தொழில் நிறுவனங்கள் பதிவுசெய்யப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டிருந்த போதிலும், நாட்டில் ஏற்பட்டிருந்த அசாதாரண சூழலை அடுத்து இப்பணி செயலிழந்திருந்தது. இந்தப் பணி தற்போது நடைபெற்று வருகின்றது.

கைத்தொழில் நிறுவனங்கள் தமது தொழில் நிலையங்களைப் பதிவு செய்வதன் மூலம் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு, புனர்வாழ்வு அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சுக்களினால் வழங்கப்படும் நிதி உதவிகள், பணியாளர்களுக்கான விசேட பயற்சிகள் பெறவும் வாய்ப்பாக இருக்கும் என அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ச)

# உறுதிபூசுதல் நிகழ்வுக்காக யாழ்.ஆயர் நெடுந்தீவுக்கு!

நெடுந்தீவு புனித பற்றிமா ஆலயத்தில் இன்று நடைபெறவுள்ள "உறுதிபூசுதல்" நிகழ்வினை நடாத்தவென யாழ்.மறை மாவட்டப் பேராயர் அதிவண தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை நெடுந்தீவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவ் உறுதிபூசுதல் நிகழ்வு நாட்டில் அசாதாரண சூழ்நிலை காரணமாக கடந்த 07 வருடங்களாக நடைபெறாதிருந்தமை குறிப்பித்தக்கது. இந்நிகழ்வில் 300 இற்கு மேற்பட்டோர் கலந்து ஆசிபெறவிருக்கின்றனர்.

நெடுந்தீவு செல்லும் பேராயர் திங்கள்வரை அங்கு தங்கியிருப்பார். (113)

# மின்சாரம் தாக்கியதில் இணுவிலில் இளைஞர் காயம்!

மின்சாரம் தாக்கியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

வீட்டிலுள்ள அன்ரனாவிற்கு இணைப்பு வழங்கிவிட்டு வயரை மேல் மாடி நோக்கி எறிந்த வேளை அது தவறி அருகேயிருந்த மின்கம்பி மீது வீழ்ந்ததில், அவ்விளைஞனின் கைகள் இரண்டிலும் படுகாயமேற்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் மாலை இணுவில் கந்தசாமி கோவில் பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் - காயமுற்ற அதேயிடத்தைச் சேர்ந்த பத்மநாதன் ராஜீவன் (வயது 17) என்ற இளைஞரே யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (60)

# ஆயுதங்களைக் களைய வேண்டும்; புலிகளிடமிருந்தல்ல, ஓடுகாலிகளிடம்!

(நேற்றைய தொடர்ச்சி)

இது விவாவதத்துக்கு எடுக்கப்படாமலே 1977 ஆம் ஆண்டுத் தேர்தலுக்காக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

இழந்த தமிழரசை மீண்டும் அமைப்போம் என்பதே 1977 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் தமிழர் கூட்டணியின் தேர்தல் கொள்கையாகப் பிரகடனப்படுத்தப்பட்டுத் தமிழ் மக்களின் ஆணை கோரப்பட்டது. இதற்குத் தமிழ் மக்கள் வடக்கிலும், கிழக்கிலும் அமோகமாக ஆதரவைத் தெரிவித்து ஆணை வழங்கினர்.

ஜனநாயக ரீதியான தமிழ் மக்களின் ஆணையைப் பெரும்பான்மை ஜனநாயக அரசு நிராகரித்து, தமிழ் இளைஞர்களின் கிளர்ச்சியை இனக்கலகத்தின் மூலம் அடக்கவும், "பயங்கரவாதம்" என்று சொல்லி ஒடுக்கவும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா புதிய அரசியல் யாப்பைக் கொண்டுவந்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியானார்.

1983 ஆம் ஆண்டில் அரசின் ஆதரவுடன் மீண்டும் நாடு முழுவதும் தமிழ் மக்களுக்கெதிராக இனக்கலகம் தூண்டிவிடப்பட்டது. தமிழர்கள் உயிரழிவுடன், பெருமளவில் சொத்துக்களை இழந்தனர். பலர் நாட்டை விட்டு அகதிகளாக வெளியேறினர்.

பேச்சுவார்த்தை மூலம் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறும், இதற்குத் தாம் உதவ புரிவதாகவும் இந்திராகாந்தி ஜே.ஆரிடம் சொன்னார். இதை ஏற்றுக் கொண்ட ஜே.ஆர். பேச்சுவார்த்தையென்று காலம் கடததினார். இந்திரா கொலை செயயப்பட்டதுடன் பேச்சுவார்த்தையும் முடிவுக்குவந்தது.

இதேசமயம், வடக்கில் ஆயுதப் படைகளை எதிர்த்துத் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடினர்.

பின்னரும் திம்புப் பேச்சுவார்த்தை என்று நாடகம் நடந்தது. தொடர்ந்து பிரேமதாஸா ஜனாதிபதியாக வந்தார். அவரும் பேச்சுவார்த்தை நடத்தினார். பயன் எதுவும் கிடைக்கவில்லை. தெற்கில் அரசியல் போட்டிகளும், அரசியல் தலைவர்கள் கொலை செய்யப்படுவதும் தொடர்ந்தது. ஜனாதிபதி பிரேமதாஸாவும் கொலை செய்யப்பட்டார்.

அடுத்து ஜனாதிபதிப் பதவிக்கு வந்த டி.பி.விஜயதுங்க - இலங்கையில் இனப்பிரச்சினையில்லை, பயங்கரவாதப் பிரச்சினைதானிருக்கிறது என்று இராணுவ நடவடிக்கைகளை தமிழ் மக்களுக்கெதிராக முடுக்கி விட்டார்.

ஆயுதப்போராட்டம் தொடர்நதது. அழிவுகளும் தொடர்ந்தன. ஜனாதிபதித் தேர்தல் வந்தது. தாம் ஆட்சிக்கு வந்தால் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கத் தம்மிடம் திட்டமுள்ளது என்று உறுதியளித்து பதவிக்கு வந்த சந்திரிகாவும் தொடர்ந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவத்தீர்வையே மேற்கொண்டார்.

விடுதலைப்புலிகளின் விடுதலைப் போராட்டத்தை "பயங்கரவாதப் போராட்டம்" என்று உலகுக்கு வெளிப்படுத்தி, "பயங்கரவாத ஒழிப்பு" என்ற பெயரில் தமிழ் இன ஒழிப்பு நடவடிக்கையில் வெற்றியீட்டும் நம்பிக்கையுடன் உலகில் "பிரிவினைவாதப் புலிப் பயங்கர

**கோபு**

வாதப் பிரசாரம்" கதிர்காமரின் துணையுடன் மேற்கொள்ளப்பட்டது.

உலக நாடுகளிடமிருந்து நவீன ஆயுதங்களையும், நவீன போர்ச் சாதனங்களையும் பெற்றும் - விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ள முடியாத நிலையில், உலகப் பயங்கரவாத இயக்கங்களுடன் தொடர்பு படுத்தி அமெரிக்க உதவியைப் பெறுவதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

விடுதலைப் புலிகள் போர் நிறுத்தம் செய்து மூன்றாந்தரப்பின் உதவியுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்ற யோசனையை முன்வைத்ததன் மூலம் அரசின் பயங்கரவாதப் பிரசாரமும், அமெரிக்க உதவியும் அந்தரத்தில் நின்றுவிட்டன.

இப்பொழுது எப்படியாவது இந்தியாவை இதற்குள் இழுத்துப் புலிகளை நசுக்கலாமென விடாமுயறசி செய்துகொண்டிருக்கின்றனர் பொதுஜன ஐக்கிய முன்னணியினரும், ஜே.வி.பியினரும், பேரினவாதிகளும்.

இந்தியாவின் போக்கும் இவர்களுக்கு ஆதரவாகவே தோன்றுகிறது.

தனக்கு மூக்குப்போனாலும் எதிரிக்குச் சகுனப் பிழையேற்பட்டால போதும் என்ற நிலையில் பேரினவாதிகளின் செயல்கள் இருக்கின்றன. திருகோணமலையை இந்தியா அனுபவித்தாலும், அமெரிக்கா எடுததுக் கொண்டாலும் பரவாயில்லை. தமிழன் உரிமை கொண்டாடமாலிருந்தாலும், தமிழனுக்கு அது போகாதிருந்தாலும்போதும் என்று பேரினவாதம் கருதுகிறது. இந்தியாவின் எல்லையோடு இருந்த சிக்கிம் என்ற நாடு சில ஆண்டுகளுக்கு முன் இந்தியாவின் ஒரு மாநிலமாக மாறியதெனபதை பேரினவாதிகள் மறந்துவிட்டார்கள். இந்தப் பேரினவாதிகளின் போக்கினால் இலங்கையும் சிக்கிம் அடைந்த கதியை எதிா நோக்க நேரிடும். அச்சமயத்தில் இலங்கையின் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்கு உண்மையான சிங்களத் தேசியவாதிகளும், தமிழர்களும் - குறிப்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகளும் இணைந்து போராட வேண்டியநிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஜனநாயக முறையில் தமிழ் மக்கள் அளித்த ஆணைகளை நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் நிறைவேற்றமுடியாமல் பெரும்பான்மை ஜனநாயகம் தடுத்தது, நிராகரித்தது.

நாடாளுமன்றத்துக்குத் தமிழ் மக்கள் தமது பிரதிநிதிகளை இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் இன்றுவரை அனுப்பி வைத்துக் கண்டபலன் ஏதுமில்லை.

தமிழ் மக்கள் பாதுகாப்பாகவும், கௌரவமாகவும், சுதந்திரமாகவும் வாழ்வதற்காகத் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்கு மகாத்மா காந்தி காட்டியவழியில் - செல்வநாயகமும், தமிழ் மக்களும் அகிம்சை முறையில் நடத்திய போராட்டங்கள் பெரும்பான்மை இனவாத ஆட்சிகளால் ஆயுதபலம் கொண்டு அடக்கி ஒடுக்கப்பட்டன.

காந்தியின் அகிம்சைப் போராட்டம் - இலங்கையைப் பொறுத்தவரையில் பெரும்பான்மைப் பேரினவாதிகளால் தமிழின ஒழிப்புக்கே வழிவகுத்தது.

ஜனநாயகமும், சாத்வீகப் போராட்டங்களும் தோல்வியடைந்தநிலையில் - தமிழ் மக்களையும், தமிழ் மண்ணையும் பாதுகாப்பதற்கு ஆயுதம் ஏந்துவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையிலேயே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப்



ஜே.ஆர்.ஜெயவர்த்தனா

போராடத் தொடங்கினார்கள்.

ஆயுதம் ஏந்திய பல குழுக்கள் பல்வேறு வழிகளில் திசைதிருப்பப்பட்டன. சில, விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக அரசபடைகளுக்குத் துணைப்படைகளாகக் கூட மாற்றம்பெற்றன.

இப்பொழுது அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் புரிந்துணர்வு ஒப்பநதம் ஏற்பட்டு ஓராண்டு நிறைவு பெற்றுவிட்டது. ஆனாலும், சமாதானம் நிலைக்குமா, நீடிக்குமா, நிரந்தரமாகுமா என்பது நிச்சயமற்றதாகவே இருக்கிறது.

வாழ்விடங்களை விட்டுவெளியேறிய மக்கள் தமது வாழ்விடங்களுக்குத் திரும்பி, புதிய வாழ்க்கையை ஆரம்பிக்க முடியவில்லை. உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தமிழ் மக்களின் சொந்த இடங்களை இராணுவம் ஆக்கிரமிப்புச் செய்துள்ளது. தமிழ் மக்கள் சுதந்திரமாகத் தமது தொழிலையோ, விவசாயத்தையோ செய்யமுடியாமல் இராணுவம் நந்திபோல் வழி மறைத்து நிற்கிறது.

இந்தநிலையில் கிடக்கிறதெல்லாம் கிடக்கட்டும், முதலில் விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைப் பறித்தெடுக்க வேண்டும் என்று பேரினவாதிகள் கூக்குரல் போடுகிறார்கள்.

புலிகளின் கைகளில் ஆயுதம் இருக்கும்வரை தமிழ் இன ஒழிப்பைத் தொடரமுடியாது என்பது பேரினவாதிகளுக்குத் தெரியும்.

புலிகளின் கைகளிலிருந்து ஆயுதங்களைப் பறித்தெடுப்பதற்கு எத்தனித்து மூக்குடைபட்ட இந்தியாவுக்கும் இது தெரியும். இதனால் தான் இந்தியாவுக்குச் சந்திரிகாவின் சகபாடிகள் அடிக்கடி இந்தியா சென்று வருகிறார்கள். இந்திய அதிகாரிகளும் இங்குவந்து சந்திக்கவேண்டியவர்களை விடுத்துச் சந்தித்துப் பேசுகிறார்கள்.

இலங்கையில் இந்தியத் தூதுவராக இருந்த ஜே.என்.டிக்ஷித், இந்திய அமைதிப்படைத் தளபதி டிப்பேந்தர் சிங் மற்றும் இந்திய அமைதிப்படையில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளாகக் கடமையாற்றுபவர்கள் தமது அனுபவங்களை எழுதியிருக்கிறார்கள். இன்னும் பலர் எழுதுவதற்கும் காத்திருக்கவும் கூடும்.

இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டுமாயின் நேர்மையானமுறையில் பேச்சுவார்த்தைகள் நடைபெறவேண்டும். பேச்சுக்களில் எட்டப்படும் முடிவுகள் உடனுக்குடன் நேர்மையான முறையில் செயல்படுத்தப்பட வேண்டும்.

இதற்குள் அவசரப்பட்டு விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் களைய வேண்டுமென எதிர்க் கட்சியினரும், பேரினவாதிகளும் வலுயுறுத்தினால் சமாதான முயற்சிகளுக்குப் பாதகமே ஏற்படுமென்பதைக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹெளவ்டே சாதுரியமாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இன்றுள்ள நிலையில் நாட்டில் கொலை, கொள்ளை முதலிய குற்றச் செயல்களைத் தடுத்து, அமைதியை நிலைநாட்டுவதற்கு முப்படைகளிலிருந்தும் நவீன ஆயுதங்களுடன் தப்பியோடிய இருபத்தையாயிரத்துக்கு மேற்பட்ட ஓடுகாலிப் படையினரைத் தேடிப்பிடித்து அவர்களின் ஆயுதங்களைப் பறித்தெடுப்பதே அவசியமும், அவசரமும்கூட.

இதை இலங்கை அரசபடைகளோ, காவற்துறையினரோ நிறைவேற்ற முடியாவிட்டால், அந்தப் பொறுப்பையும் விடுதலைப்புலிகளிடம் ஒப்படைத்துப் பார்க்கலாமே!

# மனிதனும் தெய்வமாகலாம்



வாழ்க்கை மனிதனுக்குக கிடைதத மிகப்பெரிய வரப்பிரசாதம் ஏனெனில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் கடவுளைப் பற்றி அறிய வாய்ப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வுலகில் மனிதனும், மிருகங்களும் உணவுண்டு உறங்கி தன் வாழ்வைக் கழிக்கின்றனர். ஆனால், மனிதன் - மிருகங்களிலிருந்து வேறுபட்டு நிற்கிறான். ஏனெனில், மனிதன் தன் சிந்தனை ஆற்றலினால் மிருகங்களிலிருந்து வேறுபட்டு நிற்கிறான். மனிதன் தன் சிந்தனையினால் அலையும் மனத்தை அடக்கி நேர்வழியில் நின்று, கடவுளைப் பற்றி அறிந்து, நல்வழியில் இப்பிறவியைக் கழிப்பானேயானால் கடவுளை நிச்சயமாக அடைமுடியும், மனிதனும் தெய்வமாகலாம்.

'இறைவன்' நம்முள் வாழ்ந்து கொணடிருக்கிறார். இதை உணராத நாம் பொறாமையாலும், அகங்காரத்தாலும் நம்முடைய திறமையை வீணடித்துக்கொண்டு இருக்கிறோம். நம்முள் இருக்கும் இறைவனை உணரத் தெளிவான சிந்தனை, அமைதியான மனம் ஒவ்வொருவருக்கும் தேவை.

அலைபாயும் மனத்தை அடக்கத் தொடங்குவோமேயானால் எங்களில் ஒரு மாற்றம் ஏற்படுவது உறுதி. நம் எல்லோரிடமும் இறைவனைப் பார்க்கக்கூடிய மனப்பக்குவம் வந்துவிடும். மனத்தின் ஒத்துழையாமையால் கொண்ட இலட்சியத்திலிருந்து இடைக்கண் முறிந்தவர்கள் பலர்.தொடர்ந்து பயிற்சி செய்வதால் மனதை அடக்க முடியும். அதை நாம்

**ஆன்மீக அரங்கம்**

விரும்பும் வழியில் செயற்படுத்த இயலும்.

காடடுயானை முதலாகக் கொடிய மிருகங்களெல்லாம் மனிதனுக்கு அடங்கி நடக்கவில்லையா? பயிர் வளரும்போது களைகள், பூச்சிகள் போன்ற எதிரிகள் அது வளரத் தடையாய் இருக்கின்றன. அவதானமாக அவற்றை நீக்கிவிட்டால் பயிர் நன்றாகச் செழித்து வளருகிறது. அதுபோல வேண்டாதவை நிறையத் தோன்றி மனதை ஒரு நிலைப்படுத்த, தியானம் செய்ய தடை செய்கின்றன. பயிர் வளர, அதை பாதுகாக்க வேலி மிகவும் அவசியம். அதுபோல மனத்திற்கு வேலியாக - வேதங்கள், சாஸ்திரங்கள் பெரிதும் பயன்படுகின்றன.

நல்லவை, கெட்டவை என்று இரு விதங்களிலும் பாதைகள் அனேகம் திறந்திருக்கின்றன. நல்ல பாதையைத் தேர்ந்தெடுப்பவர்கள் நேர்மையாக நடக்கிறர்கள். அல்லாத பாதையை விரும்பி மேற்கொணடால் தீமைகள் வந்து சேருகின்றன. நேர்மையான பாதையில் செல்பவர்கள் கடவுள் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கின்றனர். புறம்பான வழியில் செல்பவர்கள் தீமைகளைச் செய்யத் துணிகிறார்கள்.

கடவுள் தன்னைச் சரணடைந்தவர்களைக் காப்பாற்றுகிறார். தன் மீது நம்பிக்கை வைப்பவர்களை அவர் பாதுகாக்கிறார். தன்னை நம்பாதவர்களை அவர் மதிப்பதில்லை.

தேவர்களும், அசுரர்களும் திருப்பாற் கடலைக் கடைந்த நிகழ்ச்சி கடவுளை நம்பிச் சரணடைந்தவர்கள் தீர்க்காயுள் பெற்றதையும், நம்பாதவர்கள் அல்லல் பட்டதையும் எடுத்துக் காட்டுகிறது. மனத்தை ஒரு முகப்படுத்திக் கடவுளை எண்ணித் தியானம் செய்யும் போதுகூட விஷம் போன்ற தீய எண்ணங்கள் தோன்றுகின்றன. பாற்கடலைக்கடைந்தபோது தோன்றிய லஷ்மி, சரஸ்வதி, கற்பகவிருஷம், காமதேனுபோல அரிய பல நல்லெண்ணங்களும் தோன்றுகின்றன.

**காரை
எம்.பி.அருளானந்தன்**

பூரணமான நம்பிக்கையோடு வாழ்பவர்களுக்கு இறைவன் என்றும் துணையாக இருக்கிறான். "உள்ளத்தில் கடவுள் வசிப்பதை ஒருவர் உணர்வாரானால் அவர் ஆலயத்திற்குச் செல்லத் தேவையில்லை. அவர் உடம்பே கோயிலாகும்" என்று எரிச்சித்தர் கூறியுள்ளார். நம்முள் வசிக்கும் இறைவனை உணர மனம் ஒரு மைப்பட வேண்டும். இவ்வாறு உறுதியான ஆன்மீகப் பலம் உருவாகுமேயானால் மனிதனும் தெய்வமாகலாம்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### பாவனைக்குதவாத மாட்டிறைச்சி அழிப்பு

குருநகர் சந்தையில் இயங்கும் மாட்டிறைச்சிக் கடையில் மாநகர சபையின் கொல்களத்தில் பரீட்சிக்கப்படாததும் - மனித பாவனைக்கு உதவாததும், பொதுச்சுகாதாரப் பரிசோதகரால் அத்தாட்சிப்படுத்தப்படாததுமான 75 கிலோ மாட்டிறைச்சி விற்பனைக்காக வைத்திருந்தபோது- பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது.

### உதவி அரச அதிபருக்கு பிக்கப் வாகனம்

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு சுழற்சி முறையில் பயன்படுத்த ஒரு பிக்கப் வாகனம் வழங்கப்பட்டிருக்கிறது.

இதை ஒருமாத காலத்தில் 15 நாட்கள் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபரும் மிகுதி 15 நாட்கள் ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபரும் பயன்படுத்த வழங்கப்பட்டுள்ளது.

### சிவராத்திரியை முன்னிட்டு நாட்டுக்கூத்து

மகா சிவராத்திரியை முன்னிட்டு தென்புலோலி புற்றளை சித்தி விநாயகர் ஆலய முன்றலில் நாளை சனிக்கிழமை இரவு 10 மணியளவில் "ஸ்ரீவள்ளி", "அரிச்சந்திர மயான காண்டம்" ஆகிய இரு நாட்டுக்கூத்துக்களும் மேடையேற்றப்படவுள்ளன.




# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




# ஆட்டமா? அதிரடி தொடக்கமா?



அரவிந்த - பந்துகள் எல்லைக் கோட்டைத் தாண்டுமா?

இன்று இலங்கை அணி ஒரு பெரிய மன உளைச்சலில் இருக்கின்றது. 1996 ஆம் ஆண்டு கண்டியில் வைத்து, கென்யாவுக்குக் கொடுத்த அடியை நைரோபியில் வைத்துக் கென்யாவிடம் திருப்பி வாங்கியதை இலங்கை அணி மிகவும் கவலையுடன் ஏற்றுக்கொண்டுள்ளது. ஒரு கத்துக்குட்டி அணியிடம் முன்னாள் உலகச் சம்பியன்கள் தோற்றது, இலங்கை ரசிகர்களிடையே பலத்த ஏமாற்றத்தைத் தந்துள்ளது. அணித்தலைவர் சனத் கருத்துக் கூறுகையில் "இந்தத் தோல்வி எப்படி ஏற்பட்டது என்று தெரியவில்லை" என்றார்.

மீண்டும் மீண்டும் இலங்கை அணித்தலைவர் தொடர்ந்து Batting Order இல் தனது தெரியாத் தன்மையைக் காட்டுகின்றார். ஆர்னல்ட், சங்ககாரவுக்கு முன்னே துடுப்பெடுத்தாட அனுமதிக்கப்பட வேண்டும். கடந்த போட்டிகளின்போது இலங்கை அணியின் Score Card இனைப் பார்த்தால் ஆர்னல்ட் Not out என்பது காணப்படும். பொறுப்பான, பொறுமையான ஒரு Batsman ஆர்னல்ட்டுக்கு சந்தர்ப்பம் குறைவே.

தொடர்ச்சியாக இரண்டு பெரிய கிணறுகளைத் தாண்ட வேண்டிய கட்டாயத்தில் இலங்கை இருக்கின்றது. அதில் ஒன்று, தென்னாபிரிக்கா மற்றையது- மேற்கிந்தியத் தீவுகள் அணி, அதில் ஒரு கிணறுதான் இன்று நடைபெறும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான New Lands Cpetown இல் நடைபெறும் போட்டி. இப்போட்டி G.M.T நேரப்படி 12.30 மணிக்கு ஆரம்பமாகின்றது. இந்தப் போட்டி, ரசிகர்களிடையே பலத்த எதிர்பார்ப்பினைக் கொண்டுள்ள போட்டியாக இருக்கப்போகின்றது என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை எனப் பொதுவாகவே ஒரு கருத்து நிலவுகின்றது.

முதலில் Bat செய்கின்ற அணிக்கு வெற்றிவாய்ப்பு தென்னாபிரிக்க ஆடுகளங்களில் அதிகமே. ஆனால், சில போட்டிகள் இந்த மைதானங்களின் பழைய வரலாறுகளைப் பொய்மைப்படுத்தக்கூடியவாறு அமைந்திருந்தன.

பெரிய எதிர்பார்ப்புடன் காணப்படுகின்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி, இந்தப் போட்டியில் இலங்கை அணியை மிகவும் சவாலுடனேயே முகம் கொடுக்கின்றது. இலங்கை அணியும் - மேற்கிந்தியத்தீவுகள் அணியை முன்னர் பார்த்ததுபோல் பார்க்கவில்லை. இளம் நட்சத்திரங்களினுடைய பிரகாசிப்பு இலங்கை அணிக்கு ஒரு கலக்கத்தைக் கொடுத்திருக்கின்றது. மேற்கிந்தியத்தீவுகள் அணியின் தலைவர், அந்த அணிக்கு ஒரு Plus Point. Lara ஆட்டமிழந்தால் தொலைந்தோம் என்ற நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி இப்போது இல்லை. டிரேக்ஸ் வரையும் துடுப்புப்பாயும். ஆனால், யார் யார் எப்போது விளாசுவார்கள் என்று சொல்ல முடியாதளவுக்கு மேற்கிந்திய அணிவீரர்கள் உள்ளனர்.



லாறா - பலத்த போட்டிகளுக்கு மத்தியில்.

இன்றும் மேற்கிந்திய அணிவீரர்களுடைய வேகப்பந்துவீச்சுக்கள்- அத்தப்பத்து, மஹேல ஆகியோருடைய இலக்குகளைப் பதம் பார்க்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால், அரவிந்த டீ சில்வாவுக்கு மேற்கிந்திய வீரர்கள் என்றாலே ஒரு குளிர்ச்சி. அவருடைய பொறுப்பான ஆட்டமும் ஓட்டக்குவிப்பும் நிச்சயம் இலங்கை அணிக்குக் கைகொடுக்க வேண்டும்.

எந்த ஒரு அணியும் Bouncer பந்துகளைக் கவனமாகக் கையாள வேண்டும். இல்லாவிட்டால், பிடி முறையில் ஆட்டமிழப்பு நிச்சயம்.

மேற்கிந்தியத்தீவுகள் அணிக் கூடாரத்தில் இருக்கின்ற இளம் ஆட்டக்காரர்களுக்கும் சில மூத்த ஆட்டக்காரர்களுக்குமிடையே சில விடயங்களில் கசப்புணர்ச்சி தோன்றியிருக்கின்றது. குறிப்பாக லாராவின் கோபம், சில இளம் ஆட்டக்காரர்கள் மீது திரும்பியிருக்கிறது. ஆனால், மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (BCWI), குறிப்பாக விவியன் ரிச்சட்ஸ் சில ஆலோசனைகளை கார்ல் ஹூப்பருக்கு வழங்கியதாகத் தெரிகிறது. ஆனால், இன்றைய ஆட்டத்தில் இவர்கள் தங்களுடைய கோபதாபங்களை மறந்து சிறப்பாக ஆடவேண்டும் என்பதுதான் கிரிக்கெட் ரசிகர்களுடைய விருப்பம். இலங்கை அணியிலும் பயிற்றுநர் வட்மோர், இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நிறைவேற்று அதிகாரிகளின் கடுமையான விசனத்துக்கு ஆளாகியிருக்கின்றார். அண்மையில், கென்யா அணியிடம் கண்ட தோல்வி இப்படியான விமர்சனங்களை எல்லாம் உருவாக்கியிருக்கின்றது.



சர்வான் - இளம்புயல்.

**P.N. சுதர்சன்**

எது எப்படியிருப்பினும், இரண்டு அணிகளும் சோடைபோன அணிகளாகத் தெரியவில்லை. இரண்டு அணிகளுக்கும் கிண்ணக் கனவு என்பது இருக்கின்றது. இது நனவாகும் நாள் வருமா? இன்று நடைபெறப் போகின்ற ஆட்டம் Super Six க்குள் நுழைவதற்கான ஆட்டம் மட்டும் அல்ல, இது கௌரவத்துக்கான போராட்டமும்தான். ❖

## அவருக்காக ஒரு குரல்




கென்யா கொடுத்த அடி இலங்கைக்குப் பாரிய நெருக்கடிகளைக் கொடுத்துள்ளது. இனி வரும் ஆட்டங்கள் இரண்டிலும் வென்றாலே இலங்கைக்கு Super Six. அணியின் பயிற்றுநர் வட்மோர் நம்பிக்கையுடன் இருக்கின்றார், நூலின் மேல் நடப்பதுபோல ஒரு நிலைதான் இலங்கைக்கு. ஆனால், இலங்கை வீரர்கள் மீது எனக்கு நம்பிக்கை உண்டு என்கிறார்.

வென்ற ஆட்டங்களில் மத்திய வரிசை நன்றாகச் செய்யவில்லை என்ற ஆதங்கம் வட்மோரிடம் தெரிகின்றது. பிடிச்ச பிடியில நிண்டு கொண்டு கொஞ்சமும் விலத்தாமல் கருத்துக் கூறிக் கொண்டிருப்பது சுலபம். ஆட்டவரிசையில் மாற்றங்கள் செய்திருக்கலாம். முக்கியமாக அவிஷ்க குணவர்த்தன என்றொருவர் அணியில் இருக்கி[illegible] என்பது வட்மோருக்குத் தெரிந்திருக்கும். பலம் குறைந்த அணிகளுட[illegible]ன் ஏதாவது ஒரு போட்டியில் அவரை Opener ஆக அனுப்பி மத்திய வ[illegible]சையை மாற்றிப் பார்த்திருக்கலாம் அல்லவா. அவிஷ்க என்பவருக்கு ஏன் சந்தர்ப்பம் கொடுக்கப்படுவதில்லை. சிலரது ஆசீர்வாதத்துடன், உள்வாங்கப்படாததால் சில வியாக்கியானங்களை வைத்துக்கொண்டு இன்னும் சிலர் அவிஷ்கவை ஓரம் கட்டிக் கொண்டிருக்கிறார்களோ? இனி என்ன, இன்னும் இரண்டு தீக்குளிப்புக்கள். அதைச் செய்ய வேண்டியவர் வட்மோரே.

## நாளும் ஒரு வினா

**ODI யில் கூடிய சதங்கள் பெற்ற வரிசையில், 15 சதங்களுக்கு மேல் பெற்றவர்களை வரிசைப்படுத்த முடியுமா?**

| | | | |
|---|---|---|---|
| சச்சின் | - 34 | கங்கூலி | - 20 |
| சயீட் அன்வர் | - 19 | மார்க் வோ | - 18 |
| டெஸ்மன்ட் கெய்ன்ஸ் | - 17 | லாரா | - 16 |
| சனத் ஜெயசூரிய | - 16 | | |

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் (26-03-2003 வரை)

### அணிகள் பெற்ற புள்ளிகள்

| அணிகள் | ஆடியவை | வெற்றி | தோல்வி | முடிவு இல்லை | புள்ளிகள் | நிகர ஓட்டவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| பிரிவு A | | | | | | |
| அவுஸ்திரேலியா | 5 | 5 | - | - | 20 | +2.493 |
| இந்தியா | 5 | 4 | 1 | - | 16 | +1.279 |
| இங்கிலாந்து | 5 | 3 | 2 | - | 12 | +1.073 |
| பாகிஸ்தான் | 4 | 2 | 2 | - | 8 | +0.392 |
| சிம்பாப்வே | 4 | 2 | 2 | - | 8 | -0.091 |
| நெதர்லாந்து | 4 | - | 4 | - | 0 | -2.019 |
| நமீபியா | 5 | - | 5 | - | 0 | -3.326 |
| பிரிவு B | | | | | | |
| இலங்கை | 4 | 3 | 1 | - | 12 | +1.730 |
| நியூசிலாந்து | 5 | 3 | 2 | - | 12 | +0.402 |
| கென்யா | 4 | 3 | 1 | - | 12 | -0.398 |
| மேற்கிந்தியத்தீவு | 4 | 2 | 1 | 1 | 10 | +1.032 |
| தென்னாபிரிக்கா | 4 | 2 | 2 | - | 8 | +2.149 |

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### அவுஸ்திரேலியா எதிர் நமீபியா அணி

**அவுஸ்திரேலிய அணி**

| | | |
|---|---|---|
| கில் கிறிஸ்ட் | b வன்ரூய் | 13 |
| ஹேடன் | b பேர்கர் LJ | 88 |
| பெவன் | C & b பேர்கர் LJ | 17 |
| சிமண்ட்ஸ் | run out | 59 |
| பொண்டிங் | C கேட்ஸ் b பேர்கர் LJ | 02 |
| மாட்டின் | b கேட்ஸ் BL | 35 |
| லீமன் | not out | 50 |
| ஹொக் | not out | 19 |
| உதிரிகள் | | 18 |
| மொத்தம் 6 விக்கெட் இழப்புக்கு (50 ஓவர்கள்) | | 301 |

**பந்து வீச்சு - நமீபிய அணி**

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| வான்வியூரன் | 10 | 0 | 92 | 0 |
| வன்ரூய் | 6 | 0 | 24 | 1 |
| கேட்ஸ் BL | 10 | 0 | 62 | 1 |
| பேர்கர் LJ | 10 | 1 | 39 | 3 |
| கேட்ஸ் DB | 10 | 0 | 54 | 0 |
| பேர்ஜர் AJ | 4 | 0 | 22 | 0 |

**நமீபிய அணி**

| | | |
|---|---|---|
| பேர்ஜர் AJ | C பொண்டிங் b மக்ரா | 04 |
| சுவான் போல் | C பொண்டிங் b லீ | 02 |
| கார்க் | C கில்கிறிஸ்ட் b மக்ரா | 04 |
| கியூல்டர் | C கில்கிறிஸ்ட் b மக்ரா | 03 |
| முர்காட்றொய்ட் | LBW b மக்ரா | 00 |
| கேட்ஸ் DB | C கில்கிறிஸ்ட் b மக்ரா | 10 |
| பேர்கர் LJ | C கில்கிறிஸ்ட் b மக்ரா | 01 |
| வேன்ஸ்கூர் | C கில்கிறிஸ்ட் b பைக்கல் | 06 |
| கேட்ஸ் BL | b மக்ரா | 00 |
| வன்ரூய் | not out | 00 |
| வான்வியூரன் | C கில்கிறிஸ்ட் b பைக்கல் | 00 |
| உதிரிகள் | | 15 |
| சகல விக்கெட்டுக்களும் இழந்து (14 ஓவர்கள்) | | 45 |

**பந்து வீச்சு - அவுஸ்திரேலிய அணி**

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| மக்ரா | 7 | 4 | 15 | 7 |
| லீ | 6 | 1 | 26 | 1 |
| பைக்கல் | 1 | 1 | 0 | 2 |

**நமீபிய அணியை அவுஸ்திரேலிய அணி 256 ஓட்டங்களால் தோற்கடித்தது.**

சிறப்பிதழ் அனுசரணை:

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்

இலங்கையின் நம்பர் 01 கம்பனி "பிஸினஸ் ருடே" சஞ்சிகை
(Business Today Magazine)
இலங்கையின் தலைசிறந்த வங்கி - "குளோபல் பைனான்ஸ், த பாங்கர் சஞ்சிகை"
(Global Finance, The Banker Journal)
எமது மிகப்பரந்த கணினி வலை அமைப்புக்குள் (Comnet) யாழ்ப்பாணமும் இணைந்துள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003 இன்றைய ஆட்டம்

இலங்கை Vs மே.இ. தீவுகள் - Newlands Capetown - 6.30 pm.(D/N)
சிம்பாப்வே Vs நெதர்லாந்து - Queen's Ground Bulawayo -1.30 pm

### குச்சவெளி விவகாரம்

# பலாலியிலிருந்து செயற்பட்ட கடற்படைத் தளபதி சந்தகிரி!

பலாலிப்படைத்தளம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழமைக்கு மாறாக பரபரப்பாக காணப்பட்டது.

யாழ். குடாநாட்டின் முக்கிய விடயங்கள் குறித்து ஆராய்வதற்காக அங்கு அமைச்சர் மிலிந்த மொறகொட, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, கடற்படைத் தளபதி தயா சந்தகிரி ஆகியோரும், யாழ். அரசஅதிபர், திட்டப்பணிப்பாளர், மற்றும் மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் அங்கு கூடியிருந்தனர்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு சில நிமிடங்கள் மட்டுமே இருந்தது, அப்போது திடீரென பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவின் கைத்தொலைபேசி அலறியது, தொடர்ந்து கடற்படைத் தளபதி தயா சந்த கிரிக்கும் தொலைபேசி அழைப்புக்கிடைத்து, இதனைத் தொடர்ந்து, படை அதிகாரிகள் பலர் பரபரப்பாக அங்கும் இங்குமாக ஓடித்திரிந்தனர். இந்த பரபரப்பு சுமார் ஆறு மணி நேரம் நீடித்தது.

திருகோணமலை குச்சவெளிக்கு அண்மையில், அன்றைய தினம் விடுதலைப் புலிகள் ஏழு பேரைக் கடற்படையினர் சுற்றிவளைத்த சம்பவமே மேற்படி பரபரப்புக்கு காரணமாக அமைந்தது. இதனால், நண்பகல் நடைபெறவிருந்த கூட்டம் மாலை ஆறு மணிக்குப் பின்னரே ஆரம்பமாகியது.

குச்சவெளி விவகாரத்தை பலாலிப் படைத்தளத்தில் இருந்தே கடற்படைத்தளபதி கையாண்டார். அங்கிருந்தே களத்தில் நின்ற கடற்படையினருக்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டனவாம். (க)

## கொமன்வெல்த்...

லாளர் நாயகம் டொன்சி மக்கினன் உரையாற்றுகையில், கடந்த ஒரு வருடகாலமாக சமாதான முயற்சியின் காரணமாக வன்செயல்கள் நடைபெறவில்லை என்பதையிட்டு நாம் சந்தோஷமடைகிறேன். இங்கு மனித வளங்களைக் கட்டியெழுப்ப வேண்டியது மிக அவசியமான தொன்றாகும். நாம் இங்கு வந்தது குடாநாட்டு மக்களின் நிலை பற்றி ஆராய்வதற்கே.

இங்கு உள்ள மக்களின் நிலைமைகளைப் பார்த்து அவர்களின் தேவைகள் பற்றி அறிந்து கொண்டேன். எந்தவொரு சமுதாயத்திலும் அமைதி நிலவினால்தான் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் கலந்த கொண்ட முன்னாள் ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம், மனிதநேய ஒன்றியத்தின் தலைவர் பரமநாதன் ஆகியோரும் உரையாற்றினர்.

மனித நேய அமைப்பின் தலைவர் பரமநாதன் - உரையாற்றுகையில், உயர்பாதுகாப்பு வலயத்தினால் மக்கள் மீளக்குடியேறாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பெருமளவிலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். யாழ். நகரப்பகுதிகளில் இராணுவம் முகாம் அமைத்துள்ளதுடன், மூன்று பெரிய ஹோட்டேல்களையும் பிடித்து வைத்துள்ளது. இதனால், போக்குவரத்து வசதிகளிற்கு இடையூறாகவும் உள்ளது.

உயர்பாதுகாப்பு வலயத்தினால், தெல்லிப்பளை வைத்தியசாலையை புனரமைக்கமுடியாதநிலை உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

நிகழ்வில் பொதுநலவாய நாடுகளின் ஒன்றிய பிரதிநிதிகள் ஜோயல் கிபிசோ, மத்தேயு றியுகான்ஸ், அமிற்ரன் போர்ஜ், அரச அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், மாநகர ஆணையாளர், திட்டமிடல் பணிப்பாளர், முன்னாள் திட்டமிடல் பணிப்பாளர் மகாலிங்கம், யாழ். பிரதேச செயலர், ஆகியோர் கலந்துகொண்டனர். (ரா,60)

## வடக்கில் இயல்புநிலையை...

மேற்படி விடயங்கள் தொடர்பாக, உடனடியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு வசதியாக சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாக விஜயம்செய்து நிலைமையை ஆராயும்படி பணிப்புரை செய்தார்.

இதனைத் தொடர்ந்து, அமைச்சர் மிலிந்த, கடற்படைத்தளபதி மற்றும் பாதுகாப்புப்படை அதிகாரிகள் குழுவொன்று வடபகுதிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டது.

இவ்விஜயத்தின்போது, பலாலி படைத்தளத்தில் முக்கிய சந்திப்பொன்று நடைபெற்றது. யாழ்.அரச அதிபர், திட்டப்பணிப்பாளர், மனித நேய அமைப்புக்களின் தலைவர், செயலாளர், குருநகர் பொது அமைப்புக்களின் தலைவர் ஆகியோர், கொழும்பிலிருந்து வந்த மேற்படி குழுவினரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின்போது பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

✦ புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் அமைக்கப்பட்ட புதிய காவலரண்களான நுணாவில், மிருசுவில், கைதடி ஆகிய பகுதிகளிலுள்ள காவலரண்களை உடனடியாக அகற்றுதல்.

✦ உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான சதீஸ் நம்பியாரின் அறிக்கை கிடைத்ததும், அதனை மீள ஒழுங்கு செய்து கொள்வது.

✦ கண்ணிவெடிகள் அகற்றுவதற்குத் தேவையான உபகரணங்களைப் படையினருக்கு வழங்குதல்.

✦ பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே உள்ள காவலரண்களை அகற்றி, சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்துதல்.

✦ நலன்புரி நிலையங்களில் வசிக்கும் மக்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

✦ உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே தனியார் விடுகளிலும், கட்டடங்களிலும் இருக்கும் படையினரை வெளியேற்றுதல்.

✦ நகர அபிவிருத்தி அதிகார சபையை வட-கிழக்குப் பகுதியில் அமைத்தல்.

✦ சுகாதாரம், கல்வி, விவசாயம், கடற்தொழில், தபாலகங்கள், தொலைத் தொடர்பு போன்ற துறைகளில் நிலவுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல்.

ஆகிய விடயங்கள் அப்போது கலந்துரையாடப்பட்டன. (க,ச)

# தெற்கிலே எதிர்ப்புகள் இருப்பினு
# தேசிய விளையாட்டு விழா யாழில்

### விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவி

தேசிய விளையாட்டு விழாவை, யாழ்ப்பாணத்தில் நடாத்துவது குறித்து ஆராய விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ தலைமையிலான குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தை மேற்கொண்டனர்.

இக்குழுவினர், யாழ்.கச்சேரியில் மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மா திலகநாயகம்போல் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டனர். அங்கு விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ உரையாற்றுகையில் - தேசிய விளையாட்டு விழா இம்முறை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். தென்னிலங்கையில் விளையாட்டு விழாவிற்குச் செலவிடும் பணத்தை, வடக்கில் செலவு செய்து விளையாட்டு விழாவை நடாத்த, பிரதமர் போதியளவு பணத்தை ஒதுக்கித் தருவதாக உறுதியளித்துள்ளார்.

இவ்விளையாட்டு விழா மூலம், சிங்கள - தமிழ் மக்கள் வேறுபாடின்றி, சகோதரர்களாக மாறவேண்டும். இவ் விழாவுக்கு தெற்கிலிருந்து 4000 விளையாட்டு வீரர்கள் யாழ். வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்விழா சிறப்பாக நடைபெற அனைத்து விளையாட்டுக் கழகங்களும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும். தெற்கில பல எதிர்ப்புகள் இருந்தாலும், விளையாட்டு விழாவை யாழ்ப்பாணத்தில் நடாத்த முடிவுசெய்யப்பட்டிருக்கின்றது. சமாதானப் பேச்சு வார்த்தையின் மூலம் பிரச்சினைகளுக்கு ஓர் தீர்வு வரு நம்பிக்கையுடன் நாம் காத் றோம், என அவர் மேலும் தார்.

இக்கலந்துரையாடலில் கலாசார அமைச்சர் மகேஸ நாடாளுமன்ற உறுப்பினர் சி லிங்கம், விளையாட்டுத்துறை அ சின் செயலாளர் புஞ்சிஹேவ காரிகள் மற்றும் யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அலுவலர்களும் கலந்துகொண்டனர்.

### வாரத்தில் 7 நாட்களும் ஏ-9 வீதியை திறக்கக் கோரிக்கை

வாரத்தில் ஏழு நாட்களும் ஏ-9 பாதையை போக்குவரத்துக்காகத் திறந்து விடுமாறு விடுதலைப் புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கேட்டுள்ளனர்.

இப்பொழுது வாரத்தில் ஞாயிறு தவிர்ந்த 6 நாட்கள் ஏ-9 பாதை போக்குவரத்துக்காகத் திறந்து விடப்பட்டுள்ளமை தெரிந்ததே.

## சமாதான...

அப்போது அவர் தொடர்ந்து பேசும்போது -

பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்திலும், ஈராக் பிரச்சினையிலும் இலங்கை தரும் ஆதரவிற்கும் அமெரிக்கா பாராட்டுகின்றது.

யுத்தமொன்றில் ஈடுபடும் துணிவும் உறுதியும் எம் இரு நாடுகளுக்கும் உண்டு. அமைதி முயற்சிகளில் - தீவிரமான விடயங்கள் ஆராயப்படவும், உண்மையான இணக்கப்பாடு எட்டப்படவுமான கட்டத்திற்கு இலங்கை வந்திருக்கிறது. இது அமைதியைப் பெற்றுக்கொள்வதிலும் துணிவும் உறுதியும் குறையாதிருப்பதை தெளிவாகக் காட்டுகின்றது.

வன்முறைகளையும் இரத்தாற்றையும் கடந்து அமைதியை உருவாக்க இலங்கை மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு அமெரிக்கா முழுமனதுடன் ஆதரவளிக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

20 வருட சிவில் யுத்தத்திற்குப் பின் புனரமைப்பும், மீளிணைவும் இலகுவாகவோ அல்லது இழப்பு எதுவுமின்றியோ ஏற்படுத்தப்படாது.

சர்வதேச சமூகத்திடம் இலங்கை நல்லெண்ணத்தைப் பெற்றிருக்கிறது. அமைதி முயற்சிகளுக்கான பொருளாதார உதவிகளை அமெரிக்கா அதிகரித்து வருகின்றது. ஏனைய நாடுகளையும் அவ்வாறு உதவி செய்யுமாறு அமெரிக்கா வலியுறுத்தும்.

இலங்கையின் தனித்துவமான பொருளாதாரம், யுத்தத்தால் அழிவடைந்துவிட்டது. இப்போது அமைதி அடிவானில் தெரியும் நிலையில், உறுதியான பொருளாதார மறுசீரமைப்புக்கள் அறிவுடைய சமுதாயத்தாலும், கல்வியறிவு கொண்ட தொழிற்படையாலும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

# நாடு பிரிக்கப்படுவதைத் தடுக்க
# தலதா மாளிகையில் விசேட பூஜை

### பௌத்த பிக்குகள் நடத்தின

நாடு பிரிவதைத் தடுக்க கண்டி தலதா மாளிகையில் பௌத்த பி குகள் விசேட பூசை வழிபாடுகளை நடத்தியுள்ளனர்.

தேசிய ஐக்கிய பிக்குகள் சம்மேளனம், ஜாதிக பிக்குகள் சம்மேளன ஆகியவற்றைச் சேர்ந்த பிக்குகளே இந்த விசேடபூசை வழிபாடுக நடத்தினர்.

கண்டி தலதா மாளிகை நோக்கிப் பேரணியாகச் சென்ற பிக்கு அங்கு பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டனர். நாடு பிரிவதைத் தடு அதிஷன பூஜா என்ற சிறப்பு வழிபாடும் நடாத்தப்பட்டது. இதில் பெருந் கையான பிக்குகள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய பேராசிரியர் கும்புறுகமுவே வஜிர தே புலிகள் என்றுமே தமது தாய்நாட்டுக் கொள்கையை மாற்றியமைக்கப்போ தில்லை. சமாதான முயற்சிகள் முறிவடைந்துவிடுமோ என்ற அச்சத்தி அரசாங்கம் புலிகளின் யுத்த நிறுத்த மீறல்களையும் பொறுத்துக்கொ வருகிறது. இன்று ஏற்பட்டிருப்பது, அமைதியல்ல. யுத்தநிறுத்தம் மட்டுமே என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# தென்னாபிரிக்கா கனடாவை 118 ஓட்டங்களால் வென்றது

உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற போட்டி ஒன்றில் தென்னாபிரிக்க அணி, கனடா அணியை 118 ஓட்டங்களால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா - 50 ஓவர்கள் 254 ஓட்டங்களைப் பெற்றது.

கனடா அணி, 50 ஓவர்களில் ஐந்து விக்கெட்டுக்களை இழ 136 ஓட்டங்களை மட்டுமே பெற்ற

### முல்லைத்தீவில் வேவு விமானம் பறப்பு

முல்லைத்தீவுப்பகுதியில், விமானப்படையின் வேவு விமானம் ஒன்று பல மணித்தியாலங்களாக நேற்று பறந்து வேவு பார்த்தது. இதனால் மக்கள் மத்தியில் பதற்றம் நிலவியது.

## நோர்வே...

என்று தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப்புலிகளின் அரசிய ஆலோசகர் கலாநிதி அன்ரன் சிங்கம், நோர்வே நாட்டின் அமை சரும் பிரதி அமைச்சரும் கிளிநொச்சிக்கு விஜயம் செய்யும்போது, அங்கு வைத்து அவர்களைச் சந்திப்பார் எனத் தெரியவருகிறது.

## கிளிநொச்சி சிறான்...

சிறான் அலுவலகத்திற்கு வருகை தந்த இவர்களை, தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், சிறான் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின், ஜோய் மகேஸ்வரன் ஆகியோர் கைலாகு கொடுத்து வரவேற்றனர்.

காலை 10 மணிக்கு சிறான் கூட்டம் ஆரம்பமாகியது. இதன்போது இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் ஞாபகார்த்த சின்னம் ஒன்றினை அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் கையளித்தார்.

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நோர்வே தூதரகத்தைச் சேர்ந்த, கான்ஸ் பிரட்சுவர், தோமஸ் ஸ்ரேங்லாண்ட் மற்றும் சிறான் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின் ஆகியோரும், தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல் ன் தலைமையில் ஜோய் மகேஸ்வ அரசியற்துறையைச் சேர்ந்த பு தேவன், பாலகுமார், கௌசல்யன், திலக், பாவா மற்றும் தமிழீழ நி வாகசேவைத் துணைப் பொறுப்பாளர் இளஞ்சேரன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் தூயவன் ஆகியோரும்,

அரச தரப்பில், அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் பே குணதிலக, சிறானைச் சேர்ந்த எம். டி.டி.பீரிஸ், கலாநிதி எஸ்.எச்.ஹிஸ் புல்லாஹ், எஸ்.எல்.எம்.பளீல், பி.மத்து கொட மற்றும் கே.டபிள்யூ.ஈ.கரலியட்ட, எம்.ஐ.எம்.ரபீக் ஆகியோரும்,

ஜப்பான் அரச தரப்பில், ஜப்பான் தூதுவர் ஒட்சுகா, என்டோ ஆகியோரும் கலந்துகொண்டனர். காலை ஆரம்பமான சிறான் கூட்டம், நான்கு அமர்வுகளாக நேற்றிரவுவரை நடை பெற்றது. கூட்டம் இன்றும் தொடர்ந் நடைபெறும். (லி

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கு
கம்பன் மகன்
(நாட்டுக்கூத்து)
2003 மார்ச் 01, 02 (சனி, ஞாயிறு)
நாளையும் நாளை மறுதினமும்
மன்ற அரங்கில் மாலை 7.00 மணிக்கு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சி-617) திருமறைக்கலாமன்றம்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.02.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.